# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை(19-09-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:228


## கல்முனையில் வானில் குண்டுவெடிப்பு! 3 பொலீஸார், தமிழ் இளைஞர் பலி!!

மட்டக்களப்பு,செப்.19

கல்முனை நகரில் தாஜ்மஹால் தியேட்டருக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் தமிழருக்குச் சொந்தமான வான் ஒன்றிலிருந்த குண்டு வெடித்ததில் தமிழ் இளைஞர் ஒருவரும் நாசகாரத் தடுப்புப்பிரிவைச் சேர்ந்த 3 பொலீஸாரும் கொல்லப்பட்டனர்; மூன்று பொலீஸாரும், நான்கு அதிரடிப்படையினரும் காயமடைந்தனர்.

தமிழருக்குச் சொந்தமான வான் ஒன்று குண்டு பொருத்தப்பட்ட நிலையில் திரிவதாகக் கிடைத்த தகவலை அடுத்து பிரஸ்தாப வானைப் பொலீஸார் மறித்துச் சோதனை செய்ததாகவும் -

அதிலிருந்து ஒரு குண்டு மீட்கப்பட்டதாகவும் - மற்றொரு குண்டை அகற்றிச் செயலிழக்கச் செய்ய முற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரிப் பகுதியில் கடுஞ்சமர் தொடர்கிறது!

கொழும்பு,செப்.19

சாவகச்சேரியை மீளக் கைப்பற்றுவதற்காகக் கடும் மோட்டார் ஷெல் வீச்சுகளுடன் கடந்த ஞாயிறு இரவு புலிகள் நடத்திய முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று கொழும்பில் விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுப் பிற்பகல் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் புலிகளுக்குப் பலத்த இழப்பு ஏற்பட்டதாகவும்-

18படையினர் பலியானதாகவும்-

இருபது படையினர் காயமடைந்ததாகவும் -

அச்செய்திக் குறிப்பில் மேலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வயோதிபர் பலி

வவுனியா,செப்.19

நேற்று முன்தினம் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சு ஒன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மற்றொருவர் காயமடைந்தார் என்றும் வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த பாரியார் கண்ணப்பிள்ளை(வயது70) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் குணவதி (வயது64) என்பவரே காயமடைந்தார். (உ-8)

### எல்லை மீறிச் சென்ற மீனவர்

யாழ்ப்பாணம்,செப்.19

கடந்த ஞாயிறன்று யாழ். குடாக் கடலில் அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தை மீறி - தடை செய்யப்பட்ட பிரதேசத்துக்குள் சென்று - மீன் பிடித்ததாகக் கருதப்படும் பத்து மீனவர்களைப் படையினர் கைது செய்தனர். அவர்களின் மீன்பிடி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாகப் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### மரணம்

வவுனியா,செப்.19

நேற்று முன்தினம் கிளாலிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த குகப்பிரியா (திலகரி பேவி சுவேந்தினி - யாழ்ப்பாணம்) என்பவர் நேற்று உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்றிரவு அறிவித்தனர். (உ-8)

### ட்ரக் விபத்தில் 2 சிப்பாய்கள் படுகாயம்

வவுனியா மாவட்டம் - குருக்கள் ஊர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இராணுவத்தினர் பயணம்செய்த ட்ரக் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த சிப்பாய்கள் இருவர் படுகாயம் அடைந்தனர். ட்ரக்கும் பலத்த சேதமடைந்தது. காயமடைந்த சிப்பாய்கள் அநுராதபுரம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-7-164)

## யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ள

# 47 சடலங்களையும் இன்று புலிகள் வசம் கையளிக்க ஏற்பாடு!

## செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்19

**சாவகச்சேரிச் சண்டையை அடுத்து நேற்று அதிகாலையும் நேற்று மாலையும் நேற்றுப் பின்னிரவும் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட 47 சடலங்களையும் இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் இத்தகவலை நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

சாவகச்சேரிச் சண்டையில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் என்று தெரிவித்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் 13ஆண்களினதும் 5 பெண்களினதும் சடலங்களைப் படையினர் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தனர்.

இதேபோன்று நேற்று மாலை 27 சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் நேற்றிரவு 11 மணியளவில் மேலும் இரு பெண்களின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ரணிலைத் தாக்க முயற்சியாம்

அமைச்சர் அஷ்ரப்பின் ஜனாஸாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தச் சென்ற ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதும் அஷ்ரப்பின் வீட்டின் முன்பாகக் கூடியிருந்தவர்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் எனத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க பயணம் செய்த வாகனம் மீது அங்கு கூடியிருந்தோர் பாதணிகளை வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இன்று சந்திப்பு

கொழும்பு,செப்.19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக ஆராய்வதற்கான முக்கியசந்திப்பு ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் இந்தச் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றுவர்.

இரு தரப்புக்கும் இடையிலான

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜேர்மனியில் சத்தியாக்கிரகம்

பொன்,செப்.19

ஜேர்மனியிலிருந்து நாடு கடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள 4 ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முதல் அங்கு சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டு வரும் ஜேர்மனியின் மூன் நகரத்தில் உள்ள சிறைக்கு முன்பாக இந்த சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி முதல் நா. ராஜகாந்தன்(வயது24),சோ.சுந்தர

(12ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப்பின் மரணம் குறித்து விசாரணை முஸ்லிம் காங்கிரஸ் தனியாக நடத்தும்

கொழும்பு,செப்.19

"அமைச்சர் அஷ்ரப் ஹெலி விபத் தில் உயிரிழந்த சம்பவத்துக்கு சதி முயற்சி காரணமாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது. இதை ஜனாதிபதியிடமும் தெரிவித்துள்ளோம்."

- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஷ்ரப்பின் மரணம் தொடர்பாக எழுந்துள்ள சந்தேகத்தை உதாசீனம் செய்யமுடியாது. சதி முயற்சி அதற்குக் காரணமாக இருக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பது குறித்து ஜனாதிபதிக்குச் சுட்டிக் காட்டியுள்ளோம்; அரச தரப்பில் உயர் மட்ட விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளபோதிலும், எமது கட்சியும் தனிப்பட்ட முறையில் விசாரணைகளை நடத்த ஏற்பாடுசெய்துள்ளது.

ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் தலைமையில் இந்த மரணம் தொடர்பான விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்கத்தின் விசாரணைகள் மீது நாம் அவநம்பிக்கை கொண்டுள்ளதாகக் கருதக்கூடாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் சகல தொடர்புகளையும் முறித்துக் கொள்வதாக அமைச்சர் அஷ்ரப் தனது மரணத்துக்கு முன்பு அறிக்கை வெளியிட்டதால்; அந்தச் சூழ்நிலைகள் குறித்து நாம் கவனத்தில் கொள்ளவேண்டியவர்களாகவே இருக்கின்றோம்:

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது இவ்விடயத்தை ஜனாதிபதி எழுப்பாததனால் நாமும் அது குறித்துக் கேள்வி எழுப்பவில்லை.

அனுதாப வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் திருமதி பேரியல் அஷ்ரப்பை தலைமைத்துவத்துக்குக் கொண்டு வந்ததாகக் கூறுவது தவறு - என்றார். (உ-3-8)

## அஷ்ரப்பின் அமைச்சு ஜனாதிபதியின் கீழ்!

கொழும்பு,செப்.19

அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மறைவை அடுத்து அவரது பொறுப்பிலிருந்த துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு; புனரமைப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நேரடிப் பொறுப்பின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை அவர் நேற்று மாலை விடுத்தார்.

இதற்கிடையில் -

அஷ்ரப் வகித்த அமைச்சுப் பதவியை முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமும் திருமதி அஷ்ரப்பும் கட்சியின் இணைத் தலைவர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக இருந்து வந்த இழுபறி நிலைக்கு நேற்றுத் தீர்வு காணப்பட்டது. ரவூப் ஹக்கீமும் திருமதி பேரியல் அஷ்ரப்பும் இணைத் தலைவர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் திகாமடுல்ல தொகுதி வேட்பாளராக பேரியல் அஷ்ரப்பை நியமிக்கவும் இணக்கம் ஏற்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழுப் பகுதியில் வைத்து இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம்,செப்.19

ஊரெழுப் பகுதியில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் கோப்பாய் பொலீஸாரினால் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலத்தில் கழுத்து, நெஞ்சு, இடுப்புப் பகுதிகளில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கறுப்பு நிற சேட்டும், கறுப்பு நிற

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய கப்பல் சேவையில் 50 பயணிகளுக்கு இடமுண்டு

யாழ்ப்பாணம்,செப்.19

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை இன்று வழமைபோல் இடம்பெறும் என்றும் -

இந்தக் கப்பலில் பயணம் செய்ய 50ஆசனங்கள் வெற்றிடமாக உள்ளதால் பாதுகாப்பு அனுமதி பெற்றோர் பயண ஏற்பாடுகளுடன் வந்தால் உடன் பயணம் செய்ய வசதி அளிக்கப்படும் என்றும் -

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனில் ஆட்ஸ்
## SUNIL ARTS

21-09-2000 வியாழக்கிழமை அன்று
படச்சுருள்கள் கொழும்புக்கு
அனுப்பிவைக்கப்படும்.
என்றும் உங்கள் தேவைக்காய் சேவையாற்றுவோம்.

**சுனில் ஆட்ஸ்**
இல. 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/12981)

## வாசகர் கவனத்திற்கு

உதயன் 18-09-2000 நாளிதழில் பக்கம் 2 இல் வெளியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களின் தேர்தல் விளம்பரத்தில் இடம்பெற்ற படம் அவருடையது அல்ல. திரு. விஜயரத்தினம் இரத்தினராசாவினுடையது.



**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி**
(78223)

## வாழ்த்துகிறோம்

19 – 09 – 2000
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க
**09 ஆம் ஆண்டு நிறைவு விழா**

அறுகுபோல் தழைத்து ஆல்போல் விழுது விட்டு பல்லாண்டு சங்க அங்கத்தவர்கள் தமது நலத்துடனும் பாவனையாளர் நலங்களுடனும் செயல்பட்டு சங்கம் மென்மேலும் வளரவேண்டும் என்பதை இந்நன்னாளில் 7 வருடங்கள் நீர் ஊற்றி வளர்த்தவன் என்ற வகையில் வாழ்த்துகின்றேன்.

'மலையில் பிறந்த நதியால் மக்கள் தாகம் தணிந்தது'
மரத்தில் கனிந்த கனியால் அவர்கள் பசியும் தீர்ந்தது
அன்னைமடியில் பிறந்த உன்னால் என்ன பயன்தான் விளைந்தது?

நன்றி வாழ்க வளமுடன்

இயற்கைநேசன், குறள்வழிவள்ளல்
கே. கே. எம். கனகராசா
ஐடியல் பேக்கவுஸ்
நெல்லியடி, கரவெட்டி.

அமைப்பாளர்
வடமராட்சி கிளை.

''நல்ல மரங்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும்''
தீய மரங்கள் நஞ்சுக் கனிகளைக் கொடுக்கும்.
(78538)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை ஆசிரிய மாணவி
செல்வி வீ. றஜீனா (தமிழ் 1ஆம் வருடம்)
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் மாதர் வினாசித்தம்பி**

அவர்கள் 15-09-2000 அன்று கொழும்பில் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கலாசாலைச் சமூகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
(78534)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக்
கடமையாற்றி ஓய்வு பெற்ற

செல்வி
**ஜெயமலர் அப்புத்துரை**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது கல்விச் சமூகம் அதிர்ச்சியடைந்துள்ளது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
யா மல்லாகம் மகா வித்தியாலயம்
(78543)

# வடக்கு-கிழக்கு மக்கள், வாகனங்கள் தெற்கே செல்வதற்குக் கட்டுப்பாடு

## தேர்தலை ஒட்டி முன்னேற்பாட்டு நடவடிக்கையாம்

கொழும்பு, செப். 19
நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதை முன்னிட்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குள் பிரவேசிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளைப் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டு வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலைக் குழப்புவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கையைப் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டுள்ளனர் எனவும்—

பொதுமக்கள் மட்டுமன்றி வாகனங்கள் கூட தென் பகுதிக்குள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும்—

அந்தப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.
(உ-7)

## ஒன்பது மாணவரை சமுகமளிக்கக் கோரிக்கை

தென்மராட்சி, செப். 19
கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத் திட்டத்தில் தோற்றிய தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது தனிப்பட்ட பரீட்சார்த்திகளை எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார்.

இவர்கள் பரீட்சைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஒப்படை, ஆய்வுக் கட்டுரை, அறிமுறைப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை, செயல் திட்டங்கள் ஆகியன தொடர்பான மதிப்பீடுகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அழைக்கப்பட்டுள்ள மாணவர் வருமாறு:

கந்தசாமி வசந்தகுமாரி— நுணாவில் மேற்கு, இராசலிங்கம் கோகுலன் — சங்கத்தானை, நவரத்தினம் தபோஷினி — கைதடி, நுணாவில், கந்தசாமி வேணுகா—நுணாவில் மேற்கு, சுப்பிரமணியம் தர்மினி — மட்டுவில் தெற்கு, பரமேஸ்வரன் இன்பேஸ்வரன் — டச்சு வீதி, சாவகச்சேரி, நடராஜன் இதயவேணி—மடத்தடி, கந்தையா திருமகள்—சரசாலை தெற்கு, சந்திரன் சகிதன்— சரசாலை வடக்கு.
(ச-117)

**ராஜா**
யாழ்ப்பாணம்
கார்த்திக், ரோஜா,
அஜித்
மற்றும் பலர் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்
10.30, 2.00 (பு.நே)
(சி/12920)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
நடிப்பில்
இனிய பாடல்கள் நிறைந்த
உள்ளம்
கொள்ளை கொள்ளும்
பல்சுவை ததும்பிய
காதல் காவியம்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (பு.நே.)
(78536)

## யாழ். தபாலகத்தில் 'பக்ஸ்' சேவை

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். பிரதம தபாலகத்தில் 'பக்ஸ்' மூலம் உள்ளூர் மற்றும் வெளியிடங்களுக்கான செய்திகளைப் பொதுமக்கள் இன்று தொடக்கம் அனுப்பி வைக்க முடியும் என்று யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

அத்துடன் வெளியிடங்களில் இருந்து இங்கு வருகின்ற செய்திகளும் அஞ்சல் ஊழியர்கள் மூலம் இன்று தொடக்கம் குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் சென்று விநியோகிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

யாழ். பிரதம தபாலகத்தின் 'பக்ஸ்' இலக்கம் 021 - 3567 எனவும் தெரிவிக்கப்பட்டது.
(இ-10)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சின்னத்துரை

நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை 17 - 09 – 2000 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் — கண்மணியம்மாள் ஆகியோரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பரதன் (வண்டன்), தர்ஷிதா (பழைய மாணவி, யா / இ. ம. கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20 - 09 - 2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. புவனேஸ்வரி (மனைவி)
(ராசாத்தி)
117, அரசடி வீதி,
கந்தர்மடம்.
(78539)

### செல்லத்துரை பஞ்சாட்சரம் (பஞ்சு)

வட்டு. கிழக்கு தாவளையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சாட்சரம் அவர்கள் நேற்று 18 - 09 – 2000 காலமானார்.

அன்னார் பவானியின் (சின்னமணி) அன்புக் கணவரும் சர்மிளா, சுஜீபன், சகிலா, டுக்ஷிகா (வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி, சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநாதன் (குமரன் ஸ்ரோர்ஸ், ஹட்டன்), காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் தனபாலசிங்கம், சரஸ்வதி, பரமேஸ்வரன், மகேந்திரம், சுகிர்தலட்சுமி, அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(19-09-2000) காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
வட்டு. கிழக்கு,
தாவளை.
(78546)

### வேலுப்பிள்ளை சண்முகநாதன்

காரைநகர் சடையாளியைப் பிறப்பிடமாகவும் மொந்திபுலத்தில் வசித்தவரும், தற்பொழுது மல்லாவியில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை சண்முகநாதன் நேற்று 18-9-2000 சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் தங்கம்மாவின் (தவம்) அன்புக் கணவரும், திருச்செந்தூர்நாதனின் (செந்தில்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற அம்பலவாணர்-சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும், அருணகிரிநாதனின் அன்புச் சகோதரரும் சின்னப்பிள்ளையின் மருமகனும், சின்னாச்சிப்பிள்ளையின் மைத்துனரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவசுப்ரமணியம், சிவபாக்கியம், சிதம்பரநாதன் ஆகியோரின் சித்தப்பாவும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம் (கனடா), காசிப்பிள்ளை (முல்லைத்தீவு), கணபதிப்பிள்ளை (காரைநகர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மல்லாவியில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சிதம்பரநாதன்
(பெறாமகன்)
காரைநகர்.
மொந்திபுலம்,
காரைநகர்.
(78540)

# இஸ்ரேல் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை லெபனான் கிளர்ச்சியாளர் ஆக்கிரமிப்பு!

## "தங்கத் தடாகம்" சாதனைகள் முறியடிப்பு

முன்னாள் ஆஸ்திரேலிய நீச்சல் வீரர் அயன்ஸ்டோப் நிகழ்த்தியிருந்த ஒலிம்பிக நீச்சல் சாதனைகளை அமெரிக்க, ஜேர்மனிய வீரர்கள் முறியடித்தனர்.

பல்வேறு வகைகளைக் கொண்ட நீச்சல் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளிலும் ஸ்டோப் சாதனைகளை ஏற்படுத்தியிருந்ததால் அவை தங்கத்தடாகம் என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

## மின்வேலிகளைத் தகர்த்து எதிர்ப்பின்றிக் கைப்பற்றினர்

பெய்ரூட், செப்ரெம்பர் 19

**இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த தென்லெபனான் பிரதேசத்திற்குள் படையெடுத்து உட்புகுந்த சுமார் 250லெபனான் கிளர்ச்சியாளர்கள் அப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.**

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையே நடந்த போரின்போது லெபனானின் தெற்குப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியிருந்தது.

கடந்த மேமாதம் ஐ.நாவின் தலையீட்டால் கைப்பற்றிய தென் லெபனான் பகுதிகளில் இருந்து இஸ்ரேல் ராணுவத்தை விலக்கிக் கொண்டது.

ஆனால் 25 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய 'சோபா' வயல் வெளிப்பகுதியைத் தொடர்ந்து தனது கட்டுப்பாட்டிலேயே இஸ்ரேல் வைத்திருந்தது.

தற்போது இந்தப் பகுதியைச் சுற்றியிருந்த மின்சார வேலிகளையும் தடைகளையும் தகர்த்து உட்புகுந்த லெபனான் கிளர்ச்சியாளர்கள் 'சோபா' பண்ணைப் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியப் படையினர் கிளர்ச்சியாளர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் குறுக்கிடவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் -

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையேயான மேற்காசிய சமாதானப் பேச்சுக்கள் பெயர் வெளியிடப்படாத நகரம் ஒன்றில், இரு தரப்புகளது உயர் அதிகாரிகளிடையே நடைபெற்று வருவதாகப் பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஒ)

## ராமதாஸ் சென்ற கார்மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்!



ராமதாஸ்

புதுவை, செப்.19

புதுச்சேரி அருகே பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸின் கார் மீது வன்முறைக் கும்பல ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

கட்சிப் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக ராமதாஸ சென்று கொண்டிருந்தபோது, அவர் சென்ற வாகனத்தொடரணி மீது சுமார் ஆயிரம் பேர் அடங்கிய வன்முறைக் கும்பல் ஒன்று கற்களை வீசித் தடிகளால் தாக்கியதாகவும் -

இத்தாக்குதலில் ராமதாஸின் பாதுகாப்புக்காகச் சென்றிருந்த பொலீஸார் சிலர் உட்பட 12பேர் கடுமையாகக் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

ராமதாஸ் பாதிப்பு எதுவுமில்லாமல் காப்பாற்றப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ


இத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று பா.ம.க. அழைப்பு விடுத்திருந்த கடையடைப்புப் போராட்டத்தால் புதுவையில் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததாகவும் -

தமிழகத்தில் பல இடங்களில் அரசு பஸ்கள் எரிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஒ-8)

## விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் விரைவில் வெற்றிக்கொடி ஏற்றுவார்கள்!

### வை.கோபாலசாமி நம்பிக்கை!!



வை.கோபாலசாமி

மதுரை, செப்.19

பாகிஸ்தானும், இஸ்ரேலும் இலங்கை ராணுவத்துக்கு ஆயுதங்களை அள்ளித் தந்தாலும், அவற்றை எதிர்கொண்டு வீரப்போர் புரியும் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் விரைவில் வெற்றிக்கொடி ஏற்றுவார்கள் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

மதுரையில் ம.தி.மு.கவின் முப்பெரும் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

மேலும் தனது உரையில்:-

இந்திய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய நேதாஜி சுபாஸ் சந்திரபோஸை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள்.

நேதாஜியை வசைபாடாதவர்கள், விடுதலைப் புலிகளை மட்டும் வசைபாடுவது ஏன் என்று கேள்வி எழுப்பிய வை. கோபாலசாமி,

பிரபாகரனின பிறந்தநாளான நவம்பர் 26ஆம் திகதிக்குள் அல்லது மாவீரர்தினமான நவம்பர் 27ஆம் திகதிக்குள் யாழ்ப்பாணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வசமாகும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

(ஒ-8)

## சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்க மருந்து விவகாரங்கள்

சிட்னி, செப்.19

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்க மருந்து விவகாரங்கள் தலைதூக்கியுள்ளன.

நீண்டநேரம் களைப்பு ஏற்படாமலிருக்க ஊக்க மருந்துகளை உபயோகித்ததற்காக நோர்வே நாட்டுப் பளு தூக்கும் வீரரும், ஈரானியக் குத்துச்சண்டை வீரரும் போட்டிகளில் கலந்து - கொள்ள அனுமதி மறுக்கப்பட்டனர்.

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியதற்காக 7பேரைக் கொண்ட ருமேனிய நாட்டு பளு தூக்கும் குழு போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

சர்வதேச ஒலிம்பிக் விதிகளின்படி மூன்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் வெளியேற்றப்பட்டால் அந்த நாடு போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதியை இழக்கும்.

இதனை ருமேனியா எடுத்துக் கூறியதையடுத்து வெளியேற்றப்பட்ட 7வீரர்களில் 4பேருக்கு 50 ஆயிரம் டொலர் அபராதம் விதித்து போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஈராக் மீதான தடைகளை ஐ.நா. விலக்க வேண்டும்

### எகிப்திய அமைச்சர் கோரிக்கை

கெய்ரோ, செப்.19

ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள ஐ.நாவின் தடைகள் நீக்கப்பட வேண்டும் என்று எகிப்திய வெளிவிவகார அமைச்சர் ஆமிர் மூசா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 10ஆண்டுகளாக தடைகளால் பாதிப்புக்குள்ளாகி உள்ள ஈராக், தனது நிலையை புதுப்பித்துக்கொள்ள ஐ.நா. உதவவேண்டும் என்றும் மூசா கேட்டுக் கொண்டுள்ளார்.

1991இல் இடம்பெற்ற வளைகுடாப் போரை அடுத்து ஈராக் மீது ஐ.நா. பொருளாதாரத் தடைகள் உட்பட பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

இந்தத் தடைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று சமீபகாலமாக அரபு நாடுகள் ஐ.நாவை வற்புறுத்தி வருகின்றன.

அத்துடன் பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளும் மறைமுகமாக ஈராக்குக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

## த.மா.காவுடன் தி.மு.கவுக்கு ஒட்டுமில்லை; உறவுமில்லை

### கருணாநிதி பகிரங்க அறிவிப்பு!

மூப்பனார் தலைமையிலான தமிழ்மாநில காங்கிரஸுடன் இனிமேல் ஒட்டுமில்லை, உறவுமில்லை என்று தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதி பகிரங்கமாக அறிவித்தார்.



மூப்பனார்

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற தி.மு.கவின் முப்பெரும் நாள்கள் பொதுக்கூட்டத்தில் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

த.மா.கா. முற்றுமுழுதான எதிர்க் கட்சியாக மாறிவிட்டதாகவும், அதனை விமர்சிக்கவும், பதிலடி கொடுக்கவும் தனது கட்சியினருக்கு விதித்திருந்த தடையை விலக்கிக் கொள்வதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

த.மா.காவுடன் உறவு இல்லையே தவிர அக்கட்சியிலிருந்து வெளியேறி வருபவர்கள் தி.மு.கவில் சேர்த்துக் கொள்ளப்படுவர்கள் என்றும் அவர் கூறினார்.

காங்கிரஸிலிருந்து பிரிந்து மூப்பனார் தலைமையில் தமிழ் மாநில காங்கிரஸ் உருவானபோது, அதனுடன் கூட்டணி அமைத்த தி.மு.க. அப்போது நடந்த சட்டசபை தேர்தலில் பெரும் வெற்றி பெற்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கூட்டணியில் தி.மு.க சேர்ந்ததை அடுத்து த.மா.கா ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்தது.

ஆனாலும் தி.மு.க.வுடன் த.மா.கா. மீண்டும் கூட்டணி அமைக்கும் வாய்ப்புகள் இருப்பதாகவே கருதப்பட்டு வந்தது.

தற்போது கூட்டணி அரசு விடயத்தில் அ.தி.மு.கவுடன் த.மா.கா முரண்பட்டு பிரியும் நிலையில்



கருணாநிதி

கருணாநிதி அக்கட்சியைக் கைகழுவி விட்டுள்ளதால் மூப்பனாரின் நிலை தர்மசங்கடமாகி உள்ளதாகக் கருதப்படுகிறது.

(ஒ-8)

## இந்தியாவிலுள்ள நகரங்களை சில நிமிடங்களில் அழிப்போம்!

### பாகிஸ்தான் விஞ்ஞானி எச்சரிக்கை!!

இஸ்லாமபாத், செப்.19

இந்திய இராணுவம் எங்களிடம் வாலாட்ட நினைத்தால் இந்திய நகரங்கள் அனைத்தையும் சில நிமிடங்களில் தரைமட்டமாக்கி விடுவோம் என்று பாகிஸ்தானின் பிரபல ஏவுகணை விஞ்ஞானியான அப்துல் கதிர்கான் எச்சரித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கடந்த சிலஆண்டுகளில் பாகிஸ்தானின் ராணுவ வல்லமை பல மடங்கு வளர்ந்து விட்டதாகவும்-

இந்திய நகரங்களை மண்ணோடு மண்ணாக்கும் ஆற்றல் பாகிஸ்தானுக்கு உண்டு என்றும் தெரிவித்த கதிர்கான்.

பாகிஸ்தானுக்காக உழைக்காத விஞ்ஞானிகளுக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று கூறினார்.

உலக அரங்கில்

இதற்கிடையே இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில் நள்ளிரவு நேரத்தில் எல்லைப் புறத்தில் ஊடுருவித் தாக்கும் பயிற்சி பெற்ற புதிய எல்லை அதிரடிப்படையைப் பாகிஸ்தான் உருவாக்கியுள்ளதாக தகவல்கள் வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

(ஒ-4)

## தேர்தல் ஆணையத்துடன் தமிழகக் கட்சிகள் முரண்பாடு!

தேர்தல் திகதி அறிவித்த உடனேயே நன்னடத்தை விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளத் தமிழக அரசியல் கட்சிகள் மறுத்து விட்டன.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டவுடன் ஆளும்கட்சிகள் மக்கள் நலத்திட்டங்கள், போன்றவற்றை அறிவித்து, வாக்காளர்களைக் கவர முயற்சிசெய்வதாகவும்-

இதனால் மற்றைய வேட்பாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்த தேர்தல் ஆணையம் இந்த நிலையை மாற்ற தேர்தல் திகதி அறிவித்த பின்னர் அரசுகள் கொள்கை முடிவுகளை அறிவிக்கத் தடைவிதிக்கும் வகையில் விதிமுறைகளை மாற்ற விரும்பியது.

இதற்காகச் சமீபத்தில் தேர்தல் ஆணையம் சர்வகட்சிகள் கூட்டத்தைக் கூட்டியது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. உட்பட பெரும்பாலான கட்சிகள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

## நினைவில் நீங்கா ஈராண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகன் பரமு

தாயின் மடியில் 1921 06-09 — இறைவன் அடியில் 1998-09-11

திதி: 2000-09-19

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் திருவுருவாய்
நேசத்தொடெமை அணைத்து
நேர்வழிகள் காட்டி வைத்தீர்
ஆண்டு இரண்டு ஆனபின்பும்
ஆறவில்லை உம் நினைவலைகள்.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கும்:

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள், பூட்டிமார்.**

நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு, கைதடி.

தற்காலிக முகவரி: ஆலடிச் சந்தி, கந்தர்மடம்.

(78446)

## புத்தூர்ப் பகுதியில் ஷெல் வீச்சு

வலி. கிழக்கு செப். 19

புத்தூர்ப் பகுதியில் நேற்று முன்தினம் விழுந்து வெடித்த ஷெல்லினால்வீடு ஒன்றுசேதம் அடைந்தது மக்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

புத்தூர்க் கிழக்கு குருநாதர் கோயில் பகுதியில் இந்த ஷெல் விழுந்து வெடித்தது. (இ-180)

## நியமனம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியில் கடமையாற்றிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறியை நிறைவு செய்த இருவருக்கு அண்மையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் நா. ரகுமார், மு விஜயகுமார் ஆகிய இருவருக்குமே மேற்படி நியமனம் வழங்கப்பட்டது. (க-10)

## தென்னங்கன்று விநியோகம்

சண்டிலிப்பாய், செப். 19

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தென்னை அபிவிருத்தி சபையின் நாற்று மேடையிலிருந்து பெறப்பட்ட நல்ல இன தென்னங்கன்றுகளை சகாய விலையில் சங்க அங்கத்தவர்களுக்கும். பொது மக்களுக்கும் விநியோகம் செய்யவுள்ளது.

இந்த தென்னங்கன்றுகளை பெற விரும்புவர்கள் தத்தமது சங்கக் கிளைகளில் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று சங்கத்தின் தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (இ-135)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

வலி.கிழக்கு, செப். 19

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி பின்வரும் இடங்களில் போடப்படவுள்ளதால் நாய் வளர்ப்பாளர்கள் தவறாது தத்தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் கேட்டுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30மணிவரை திருநெல்வேலிகாளி கோயிலடி நேதாஜி சனசமூகநிலையத்திலும்10.45 மணி தொடக்கம் 12 00 மணி வரை கோயில் வீதி, மனோன்மணி சனசமூக நிலையத்திலும், 1.00 மணி தொடக்கம் 2. 30 மணி வரை சம்பியன்லேன், வளர்மதி சனசமூக நிலையத்திலும்.

20 ஆம் திகதி— காலை 9 மணி தொடக்கம் 10. 30 மணிவரை கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடத்திலும்,10. 45 மணி தொடக்கம் 12.00மணி வரை கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவிலடியிலும், 1,00 மணி தொடக்கம் 2. 30 மணிவரை கொக்குவில் மேற்கு கேணியடி கலைமகள் சனசமூக நிலையத்திலும்,

21 ஆம் திகதி - காலை 9 மணி தொடக்கம் 10.30மணி வரை கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும், 10. 45 மணி தொடக்கம் 12 15 மணி வரை ஆறுகால்மடம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் 1. 00 மணி தொடக்கம்2 -30 மணி வரை கொக்குவில் மேற்கு பிடாரி கோவிலடியிலும்.

22 ஆம் திகதி — காலை 9 மணி தொடக்கம் 10-30 மணி வரை கொக்குவில் மேற்கு பூநாரிலேன் கலைவாணி சனசமூக நிலையத்திலும், 10-45 மணி தொடக்கம் 12-00 மணி வரை கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது. (இ-180)


மானிப்பாய்

## ப. தெ. வ. அ. கூ. சங்கம் (வ-து)

## தேநீர்க்கடை வாடகைக்கு விடல்

எமது சங்கத்தின் பராமரிப்பில் பொன்னாலை வீதி. மானிப்பாய் (பிப்பிலி) பகுதியில் சகல தளபாடவசதிகளுடன் கூடிய தேநீர்க்கடை ஒன்று வாடகைக்கு விடப்படவுள்ளது. வாடகைக்கு பெறவிரும்புவோர் தங்களால் வழங்கப்படக்கூடிய முற்பணத் தொகை, மாத வாடகையாக வழங்கக்கூடிய தெர்கை என்பவற்றைக் குறிப்பிட்டு கடித உறையில் இட்டு தபால்மூலமோ அல்லது நேரிலோ பொது முகாமையாளர், மானிப்பாய் ப.தெ.வ .அ.கூ சங்கம், பிரதான வீதி, மானிப்பாய் .என்ற முகவரிக்கு 21.09.2000 வியாழக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு முன்கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

– பொது முகாமையாளர்

(78533)


## இதய அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி இந்திராணி சிவனடியான்
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் கந்தையா

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் அன்னாரின் குடும்பத்துக்கு தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள். யாழ்ப்பாண மத்திய கல்லூரி.**

ஆசிரிய வட்டம். (78527)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை

கீழ்க்காணும் துணிவகைகள் வழங்கக்கூடிய நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| இல. | துணிவகை | தேவைப்படும் துண்டுகள் |
|---|---|---|
| 1. | ''கிறீம்'' நிறபொலியெஸ்டர் சேட் துணி 45'' அகலத்தில் 3 மீற்றர் நீளம் | 159 |
| 2 | ''கிறீம்'' நிறபொலியெஸ்டர் சேட் துணி 45'' அகலத்தில் 7.70 மீற்றர் நீளம் | 79 |
| 3. | ''கிறீம்'' நிறபொலியெஸ்டர் காற்சட்டைத்துணி 60'' அகலத்தில் 2.40 மீற்றர் நீளம் | 159 |
| 4. | படுக்கை விரிப்பு - காரிக்கன் துணியில் (நெசவு 2/30 × 16'' - 52 × 52) (GREY SHEETING) 90'' × 54'' அளவில் | 1000 |
| 5. | காரிக்கன் துணி (GREY SHEETING) (நெசவு - 2/30 × 16-52 × 52) 36 '' அகலத்தில் 2 மீற்றர் நீளம்) | 250 |
| 6. | கோடிட்ட துணி (நெசவு - 2/ 30 × 16'' - 40 × 60 90 '' × 45 '' அளவில் | 1000 |
| 7. | துவாய், குளியல் 136 செ. மீ × 66 செ. மீ அளவில் | 60 |
| 8. | துவாய், கை 110 செ. மீ × 56 செ. மீ. அளவில் | 60 |
| 9. | துவாய், ஜி. எஸ். (நெசவு - 2/30 × 16 '' - 52 × 52) 36 '' × 36 '' அளவில் | 2500 |

துவாய் (ஜி எஸ்) நான்கு பக்கமும் மடித்துத் தைக்கப்பட்டிருக்க வேண்டும்.

1) விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் முடிவு திகதி: 25–09–2000.
2) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் முடிவு திகதி: 30–09–2000.
மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் ரூபா: 50/- ஆகும்.

விண்ணப்பப் படிவத்துக்கும் மேலதிக விவரங்களுக்கும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

வைத்திய கலாநிதி (செல்வி) என். கனகரத்தினம்
பணிப்பாளர்

18–09–2000 (சி(12979)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09 – 03 – 1936

உதிர்வு: 11 – 09 – 1998

### அமரர் பொன்னையா பத்மராஜா

திதி: 19-09-2000

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

பிளாக் வீதி, சங்கானை. (78395)

# உதயன்

## சோழியன் குடுமி சும்மா......!

யாழ்ப்பாணத்தில், குறிப்பாக மாநகரசபைப் பிரதேசத்திலும் அதனை அண்டிய ஊர்களிலும் வாழும் மக்களுக்கு இப்போது 'காது புளித்த' நிலை வந்து கொண்டிருக்கிறது. காரணம் என்ன? காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு, வைகறைப் பொழுதென்று 24மணி நேரமும் - எவ்வேளையும், எக்கணமும் - எறிகணை வீச்சின் பயங்கரச் சத்தம், 'கிபிர்' விமானம், தாழப்பறக்கும் ஹெலி என்பன உண்டாக்கும் படுபயங்கரப் பேரிரைச்சல், அவை தாக்குதல் நடத்தும்போது உண்டாக்கும் கர்ண கொடூரமான சத்தம் என்பனவற்றினால் மக்களில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு 'காது புளிப்பது' மட்டுமன்றி செவிப்புலன் கெட்டுப் போகும் ஆபத்தும் உண்டாகலாம்.

இப்பிரதேசங்களில் வாழும் குழந்தைகளும், நோயாளிகளும், முதியவர்களும் ஷெல், விமானத்தாக்குதல்களால் நாடி நரம்புகள் உறைந்து போகும் அளவுக்கு, உடல் சிலிர்த்து, இதயம் அதிர்ந்து படும் அவலம் நேரில் பார்ப்பவர்களால் மட்டும்தான் உணரக் கூடியது.

இராணுவ நடவடிக்கைகளின் நாளாந்த அதிர்வும், பதற்றமும், பயமும் தொடர்ந்தால் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் எல்லோரும் - வயது வேறுபாடின்றி - நோயாளர்களாகும் பாதகநிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவை எல்லாவற்றையும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிந்திருப்பார்கள். இவர்களில் பலரும் வாக்காளரின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு யாழ். நகரப் பகுதியில் தங்கி நிற்பதால் நேரில் அனுபவித்தும் உணர்ந்தும் இருப்பர்.

ஆனால் கொழும்பில் உள்ள அமைச்சர்களுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் இந்த அனுபவமும் இல்லை; பாதிப்புக் குறித்த உணர்வுமில்லை. எனினும் மனிதப் பிறவிகள் என்ற வகையில், இந்த நாளாந்த நடவடிக்கைகளால் குடாநாட்டு மக்கள் படும் துயரத்தையும் அவர்களுக்கு உண்டாகக்கூடிய ஆபத்துகளையும் அவர்களால் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே இழந்த பகுதிகளை மீட்பதாக, யாழ்ப்பாண நகரத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக அரசாங்கமும், அதன் பிரதானிகளும் கூறியவாறு இராணுவத் தாக்குதல்களை வாராந்தம் நடத்துகிறார்கள்.

வார இறுதி நாள்களை அதிர்ஷ்ட நாள்கள் என்று கருதியோ என்னவோ அந்த நாள்களில் வானத்திலும் தரையிலும் முழங்குகிறார்கள்.

இந்த இராணுவத் தாக்குதல்களை அவதானிக்கும் போது, தேர்தல் நடைபெறும் வரைக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவை வாராந்த நிகழ்வுகளாகும் என்றே ஊகிக்க வேண்டியுள்ளது. நெருக்கமான தனது தேர்தல் பிரசார அட்டவணையின் மத்தியிலும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேரம் ஒதுக்கினார். இங்கு வந்து குடாநாட்டில் பணிபுரியும் - போர்க்களத்தில் நிற்கும் - சிப்பாய்களுக்கும் அதிகாரிகளுக்கும் உற்சாகமும் ஊக்கமும் அளித்துச் சென்றுள்ளார்.

அது மட்டுமா? குடாநாட்டில் ஏப்ரல் - மே மாதங்களில் விடுதலைப் புலிகளிடம் இழந்த பகுதிகளை மீட்க வேண்டும் என்று உத்தரவிட்டும் சென்றுள்ளார்.

ஆகையால் தேர்தல் நாள் வரைக்கும் வாராந்த இராணுவ நடவடிக்கைகள் குடாநாட்டில் தவறாது நடத்தப்படும் என்று அனுமானிக்க முடிகிறது.

நவீன போர்த்தளபாடங்கள் 'கையில் இருப்பதனால்' போர்நடவடிக்கைகள் தீவிரமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

தேர்தலை அண்டிய போர் நடவடிக்கைகள் தெற்கில் ஆளுந்தரப்புக்கு வாக்கு வாங்குவதற்கான உத்தியே என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. "நாங்கள் போரை நிறுத்தவில்லை பார்த்தீர்களா?; நிறுத்தப் போவதும் இல்லை. உங்கள் வாக்குகளை எங்களுக்குத் தாருங்கள்" என்று கேட்பதற்கான உத்தி இது. சோழியன் குடுமி ஒருபோதும் சும்மா ஆடாது. அவ்வாறில்லை, தேர்தலைக் குடாநாட்டில் பாதுகாப்பாக நடத்துவதற்காகவே இராணுவ நடவடிக்கை என்று அரசு கருதுமானால் - கூறுமானால் - அது எதிரிடையான பெறுபேற்றையே தரும்.

# குண்டுத் தாக்குதலுக்கு சுதந்திரக்கட்சி கண்டனம்

கொழும்பு,செப்.19

கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு முன்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை சிறீலங்கா சுதந்திரக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.வி.திஸநாயக்கா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

புலிகள் அமைச்சரையோ அல்லது இராணுவ உயர் அதிகாரியையோ இலக்குவைத்தே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். புலிகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் ஏற்கனவே படுகொலை செய்துள்ளனர்.


இதுவரை கிடைத்த தகவல்களின்படி கொழும்பு நகருக்குள் பெருமளவான தற்கொலைக் குண்டுதாரிகள் புலிகளினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. ஆனால், புலிகளின் இத்தகைய தாக்குதல்கள் பற்றி ஐ.தே.கட்சி மௌனம் சாதித்து வருவதும் கண்டிக்கத்தக்கது - என்றார். (இ-9)

## எலும்புக் கூடுகள் மீட்பு

வவுனியா,செப்.18

கிளிநொச்சி மாவட்டத்தில் விவேகானந்தா நகரில் வீடொன்றின் மலக்குழிக்குள் இருந்து இரண்டு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)



சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

புனரமைக்கப்பட்ட தூபிக்கு கும்பாபிஷேகம் செய்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

படம்:- பா.நந்தகுமார் (அரியாலை செய்தியாளர்)

# ஐ.தே.க.பதவிக்கு வந்தால் போரை முடிவுக்குக் கொண்டுவர ஒப்பந்தம்

## ரணில் கூறுகிறார்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றிபெற்றுப் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் வகையில் பலதரப்பட்டவர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்படும். அதற்கு உரிய பலம் ஐ.தே. கட்சியிடம் உண்டு.

மேற்கண்டவாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை, சிலாபம் ஆகிய இடங்களில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தும் போது மேலும் கூறியதாவது:-

பொதுமக்களுக்கு நல்ல வருமானத்தை உறுதிப்படுத்தும் வகையில் நாட்டின் பொருளாதாரமும் வர்த்தகத்துறையும் அபிவிருத்தி செய்யப்படும். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்.

உல்லாசப் பிரயாணத் தொழில் அபிவிருத்தி செய்யப்படும். சமுர்த்திக் கொடுப்பனவும் சம்பளமும் அதிகரிக்கப்படும்.

மீன் பிடித்துறை சம்பந்தமாகவும் புதிய திட்டங்களும், தொழிநுட்ப முறைகளும் அறிமுகப்படுத்தப்படும். மேலதிக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையிலும், பொதுமக்களின் சுமைகளைக் குறைப்பதற்கு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன், விவசாயத்துறை நவீன மயப்படுத்தப்படும்; விவசாய உற்பத்திப் பொருள்களை துரிதமாகச் சந்தைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-8)

## இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளில் திருட்டு

அரியாலை,செப்.19

ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம் பகுதிகளில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்தப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததைப் பயன்படுத்தி திருடர்கள் பட்டப் பகலில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

வீடுகளைப் பார்ப்பது போன்று பாசாங்கு பண்ணித் திருடர்கள் இடம்பெயர்ந்த மக்களின் பெறுமதி வாய்ந்த பொருள்களை எடுத்துச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீட்டு வளவுகளில் இருக்கும் பயன்தரும் மரங்களைக்கூட திருடர்கள் கோடரியால் தறித்துச் செல்கின்றனர். வீட்டுத் தளபாடங்கள் மற்றும் பொருள்களையும் அவர்கள் களவாடிச் செல்கின்றனர். (இ-17)

## பொலீஸார் சுட்டதில் ஒருவர் பலி

வாரியப்பொலவில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு எதிர்கட்சித் தலைவர் ரணில் பங்குபற்றிய ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டத்தைக் குழப்ப முயன்ற கும்பல் ஒன்று பொலீஸார் தலையிட்டுத் தடுக்க முயன்றபோது பொலீஸாரையும் தாக்க முற்பட்டது என்றும் -

அப்போது அவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் -

செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (உ-3-5)

## உதை பந்தாட்டம்

கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 4 மணிக்கு - தொண்டமனாறு ஒற்றுமை வி.க. அணி எதிர் அல்வாய் நண்பர்கள் வி.க.'ஏ' அணி

* மாலை 5 மணிக்கு - திக்கம் வி.க. அணி எதிர் மனோகரா வி.க. 'ஏ' அணி.

## தேர்தல் பிரசாரம் நிறுத்தம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்குத் துக்கம் அனுஷ்டிக்கும் முகமாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனைத் தேர்தல் தொகுதியில் ஒரு வார காலத்துக்கு ஐ.தே.கட்சி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளதாக அந்தத் தொகுதியின் ஐ.தே.க.தலைமை வேட்பாளர் மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

# நீதியான முறையில் நடத்துவதற்கு பல்வேறு இரகசியத் திட்டங்கள்!

## அதில் ஒன்றுதான் 'ஸ்ரிக்கர்' விவகாரம்

கொழும்பு,செப்.19

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தும் வகையில் ஊழல்களைக் குறைப்பதற்காக இரகசியத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம். அந்தத் திட்டங்களில் ஒன்றே தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள 'ஸ்ரிக்கர்' விவகாரம்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'ஸ்ரிக்கர்' விவகாரம் அம்பலமானதால் தில்லுமுல்லுகள் நடக்குமென எதிர்பார்க்க முடியாது மாறாக மக்கள் அனைவரதும் கண்ணோட்டமும் இதன்பால் திரும்பியிருக்கும். இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்தில் பரமரகசியம் எதுவும் கிடையாது.

வாக்காளர் அட்டைகள் களவாகத் தயாரிக்கப்படுவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த 'ஸ்ரிக்கர்'களை அச்சிடுவதற்கு எண்ணினேன். நான் இவ்வாறு செய்யாவிட்டால் மக்கள் என்னையே குறை கூறுவார்கள்.

தேர்தல் நெருங்கிவரும் வேளையில் இரகசியத் திட்டங்கள் பற்றி சகல தேர்தல் அதிகாரிகளுக்கும் விளக்கமளிக்கப்படும்.

இப்படித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் இருந்து வெளிவரும் மற்றோர் வார வெளியீட்டுக்கு அவர் அளித்த பேட்டியில்:-

யார் எதை அலட்டிக் கொண்டு திரிந்தாலும் எனது பதவிக்காலம் முடியும் வரை தேர்தல் ஆணையாளர் பதவியிலிருந்து விலகமாட்டேன்.

பொதுத்தேர்தலை நடத்துவது எனது தேசிய கடமை. எனவே அந்தக் கடமையில் இருந்து நான் ஒரு போதும் ஒதுங்கிச் செல்ல முடியாது - என்றார். (இ-7-186)

# யாழ். பல்கலை மாணவர் மீது வவுனியாவில் வைத்து ராகிங்

வவுனியா,செப்.19

யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் சிலர் வவுனியாவில் வைத்து 'ராகிங்' துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாகக் கூறப்படுகிறது.

வன்னிப்பகுதியிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்காக வவுனியாவுக்கு வந்த பொழுதே துன்புறுத்தப்பட்டனராம்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை வவுனியாவிலுள்ள வீடொன்றில் வைத்து புகுமுக மாணவர் ஒருவர் நான்கு சிரேஷ்ட மாணவர்களினால் 'ராகிங்' வதைக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பகுதியில் 'ராகிங்' துன்புறுத்தல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## நிறைவு விழா

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 9 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் 4 பிரதான வீதியிலுள்ள சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## டிராக்டர் புரண்டது

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கெனப்பயன்படுத்தப்பட்ட வண்டிலை ஏற்றிவந்த டிராக்டர் தடம்புரண்டதில் இருவர் சிறு காயங்களுக்கு உள்ளானார். மூளாய் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள வயல்வெளிப் பகுதியில் நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-7)

# அஷ்ரப் பயணம் செய்யும் வழமையான வான் பாதை மாற்றப்பட்டது ஏன்?

## சந்தேகம் தெரிவிக்கிறார் மு.கா.பிரமுகர்

ஒலுவில்,செப்.19

"எமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது. ஹெலிகொப்டர் பிரயாணம்செய்யும் வழமையான பாதை அன்று மாற்றப்பட்டுள்ளது. இதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை"

இவ்வாறு, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும் முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச் சேனை மத்திய குழுத் தலைவருமான எம்.எஸ்.உதுமா லெப்பை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள 'பக்ஸ்' செய்தியில் தெரிவித்துள்ளார்.

"ஹெலிகொப்டர் விபத்து நடந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் எமது தலைவரின் மரணத்தில் சந்தேகம் எழுந்துள்ளது. ஹெலி விபத்துக்குள்ளானதா? அல்லது அதில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தனவா என்பதை அறியமுடியாமல் உள்ளது. ஆகவே இது குறித்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை அறியத்தருக.'

இப்படி அந்த 'பக்ஸ்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5-4)

**நாளை**

**புரட்டாதி 4**

**புதன்கிழமை**

*திதி:* ஸப்தமி முன்னிரவு 6.59 வரை.

*நட்சத்திரம்:* ரோகிணி முற்பகல் 11.43 வரை.

*சுபநேரம்:* 4.32 - 6.02

*ராகுகாலம்:* 12.02 - 1.32

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

**சம உணர்வுற்ற சகோதரப் பான்மையே மனித சமூகமனைத்தும் ஒருங்கே சேருவதற்குரிய சீரிய நிலையாகும். மக்கள் ஒருவரோடொருவர் சகோதரப் பான்மை எய்தினால் உத்தம சாந்தி நிலவும். அப்பொழுது இப்புவி முழுவதும் ஒரு வீடெனவே ஒளி திகழும்.**

*- ஸ்ரீ ரமண பகவான்*

# மொழி வன்மை சிதைவுறுகின்றதா?

**இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகரின் சதாபிஷேகத்தை ஒட்டி வெளியிடப்பட்ட 'தேசிகம்' என்ற மலரில் 'மொழி வளர்ச்சி' என்ற தலைப்பில் இடம்பெற்ற கட்டுரை இது.**

உலகில் மானுட இனத்திற்கு இறைவனால் தனித்து வழங்கப்பட்ட வரமாய் விளங்குவது, மொழி.
ஐந்தறிவுக்கு உட்பட்ட மற்றைய ஜீவராசிகள் இப்பேறு எய்தில.
அவற்றிற்கு மனம் எனும் சூக்கும உறுப்பு பூரணப்படாமையின்,
எண்ணவிரிவு இலதாயிற்று.
உடற்றேவையே அவற்றின் உணர்வாக வரையறுக்கப்பட்டது.
காமம் போன்ற உணர்வுகளிற் கூட அவை கால வரையறைக்குட்பட்டு நிற்பதே, அதற்காம் சான்று.
ஆதலால் -
சொற்பமான தம் உணர்வுகளை வெறும் சப்தங்களால் அவை பகிர்ந்து கொண்டன.
மனம் எனும் சூக்குமஉறுப்பைப் பூரண வளர்ச்சியோடு பெற்ற மனிதனோ,
மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் அறிவுக் கருவிகளால்,
உள் வாங்கிய செய்திகள் கொண்டு,
மனதை இயக்கி,
பலவாய் சிந்திக்கத் தலைப்பட்டான்.
இச்சிந்தனை விரிவில்,
உணர்வுகள் பிறந்தன.
உணர்வுக் கலப்பினால் எண்ணங்கள் ஆயிரமாய் விரிய,
அவ்வெண்ணங்களை மற்றவரோடு பகிர்ந்துகொள்ளும் தேவை,
மானுடனுக்கு அவசியமாயிற்று.
மற்றைய ஜீவராசிகள் போல் விரிந்த தம் எண்ண வெளிப்பாட்டினை,
ஒரு சில சப்தங்களுக்குள் அடக்க இயலாமை அறிந்து,
அவன்,
உணர்வுகளை முழுதாய் உள்வாங்கி,
மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும்,
ஒரு கருவியின் தேவை உணர்ந்தான்.
செவ்விதாய ஒரு மொழியை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு,
முதல் முயற்சியாய் ஓசைகளை வரையறுத்து,
அவற்றை அட்சரங்களாக்கினான்.
பின் அந்த அட்சரங்களைத் தொகுத்துப்
பொருள் குறிக்கும் சொற்களாக்கினான்.
நிறைவாக, அச் சொற்களை இணைத்து வாக்கியங்களாக்கிய அவன்,
அவ்வாக்கியங்களை தன் கருத்தினைக் காவும் கருவியாக்கி,
பின் அக்கருவியை நுட்பங்களுடன் கையாளும் திறன் பெற்று
மொழியாக்க முயற்சியில் முழு வெற்றி கொண்டான்.

❁ ❁ ❁

இட எல்லைகளால் மனித இனம் குழுக்களாய் பிரிக்கப்பட,
அக்குழுக்களின் பிரிவுக்கேற்ப,
அவற்றால் ஆக்கப்பட்ட மொழிகளும் பலவாயின.
அக் குழுக்களின் காலத்தொன்மையால்,
அவற்றின் அனுபவப் பதிவு நீள,
அந்த அனுபவத்தாற் பெறப்பட்ட அறிவுக் கூர்மையே,
அவ்வக் குழுக்களின் மொழிக் கூர்மையாயிற்று.
ஆதலால் -
காலம் தரும் அனுபவம்,
அனுபவம் தரும் அறிவு,
அறிவு தரும் கூர்மை
எனும் தொடர்பு கொண்டு,
மறுதலையாய்,
அவரவர் மொழிக் கூர்மையால் அம் மொழி பேசும் இனத்தின்,
காலத்தொன்மை வரையறை செய்யப்பட்டது.
தன் அழிவோடு,
தான் அனுபவத்தால் பெற்ற அறிவும் அழியும் அபாயமுணர்ந்த மனிதன்,
மொழியாக்கத்தினால் அந்த அபாயத்தினைத் தடை செய்தான்.
நித்தியமற்ற மனிதன்,
தன் எண்ண வளர்ச்சியை மொழியில் பதிவு செய்ததால்,
அவன் அனுபவப் பதிவுகள்,
அவனோடு அழிந்து போகும் அவலம் நீங்கி நித்தியம் பெற்றன.
அதனால் -
திரும்பத்திரும்ப ஒரே அனுபவத்தைப் பெறுதலின்றி,
ஒருவர் அனுபவத்தை மற்றவர் பெற்று,
புதிது புதிதாய் தேடும் வாய்ப்பு மானுடர்க்குக் கிட்டியது.
பல்லாயிரக்கணக்கான மானுடரின் பல நூற்றாண்டு அனுபவங்கள்,
மொழியில் தொகுப்பாக,
மொழி அறிவுக் களஞ்சியமாயிற்று.
அதுவே பின் கல்வி எனப்பட்டது.
தேடுவோர் தொகை காலத்தால் நீண்டு முடிவற்றுப்போக,
கல்வியும் கரையிலதாயிற்று.
உணர்வு வெளிப்பாட்டிற்காய் மனிதனால் வளர்க்கப்பட்ட மொழி,
அறிவுக்களஞ்சியமாகி,
பின் அவனையே வளர்த்தது.
அறிவைத்தேக்கும் களஞ்சியமாகவும்,
பின் அவ்வறிவை வெளிப்படுத்தும் கருவியாகவும் ஆகி,
மொழி அற்புதம் செய்தது.
இதனால் மொழி மானுடத்தின் தனி அடையாளமாய்ப் போக,
வாழ்வின் பல கூறுகளிலும் அதன் அவசியம் உணரப்பட்டது.
மானிட வாழ்வை பூரணமாகத் தம் நூலுள் அடக்கிய வள்ளுவரும்,
சமூக இணைப்பு நோக்கி,
இல்லறத்துக்கு மொழியினை,
இன் சொல்லாகவும்
அற வரையறை செய்வதன் அவசியம் நோக்கி,
துறவறத்துக்கு மொழியினை,
வாய்மையாகவும்
செயலின் வெற்றி குறித்த நிர்வாகத் திறன் நோக்கி,
பொருட்பாலில் மொழியினைச்
சொல்வன்மையாகவும்
மயக்க நிலையாகிய காம இன்பத்திற்குப் பொய்ம்மையே
இனிமைபயத்தலின்,
அது நோக்கி காமத்துப்பாலின் மொழியினை,
புணைந்துரையாகவும்,
வரையறை செய்து வியப்பூட்டுவர்.
இங்ஙனமாய்,
வாழ்வின் பல நிலைகளிலும் மொழியின் தேவை,
வள்ளுவத்தாலும் விரிக்கப்படும்.

❁ ❁ ❁

அறிவு வெளிப்பாட்டுக் கருவியாய் மொழி அமைந்து போக,
விதியினாலும், அனுபவத்தினாலும் கல்வியினாலும் அமையும்,
தனிமனித அறிவு,
அவரவர் வாய் மொழி கொண்டே கணிக்கப்பட்டது.
ஆதலால் -
மொழி,
மனித அறிவுத் திறனை எடைபோடும் நிறை கோலாயிற்று.
ஆரம்பத்தில் உணர்வுகளை வெளிப்படுத்த,
நீண்டு வளர்ந்து வெளிப்பட்டமொழி,
மனித அறிவு கூர்மைப்படக் கூர்மைப்பட,
சுருங்கலாயிற்று.
மானுடன்,
ஒரு சில சொற்களுக்குள்,
நீண்ட உணர்வை வெளிப்படுத்தும் வன்மை பெற்றான்.
அவ்வளர்ச்சியில்,
மொழிக்கருவியின் முதலங்கமான,
தனி அட்சரங்களும் பொருள் தரும் சொற்களாயின.
அட்சரங்களற்ற சப்தங்களும்,
பொருள் வெளிப்பாடு செய்தல் சாத்தியமாயிற்று.
சப்தங்களற்ற அங்க அசைவுகளும் கூடப் பாஷையாயின.
இதன் உச்ச நிலையாய்,
பார்வைக் கூறுகளே பாஷையாய்ப் பயிலப்பட்டன.
இந் நிலையையே,
*"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து"*
என அறத்துப் பாலிலும்,
*"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்,*
*வகைமை உணர்வார்ப் பெறின்"*
எனப் பொருட்பாலிலும்,
*"கண்ணொடு கண்ணினை நோக்கின் வாய்ச்சொற்கள்,*
*என்ன பயனும் இல"*
எனக் காமத்துப் பாலிலும்,
வள்ளுவரும் பதிவு செய்கிறார்.
உணர்வொத்த இருவரிடத்து,
சப்தத்தினாலும், அங்க அசைவுகளாலும், பார்வைகளாலும்,
வெளிப்படும் குறிப்புக்களே,
விரிந்த மொழி வெளிப்பாட்டின் தேவையைப் பூர்த்தி செய்தன.
இது தவிர,
உணர்வொத்த இருவர் குறிப்பால் வெளிப்படுத்தும்
வாய்ச்சொற்கள்,
தம் வழமைப் பொருள் இழந்து,
அவ்விருவர்க்குமாம் தனியர்த்தம் பேசின.
மொழியாக்கத்தின்முன்,
அங்கங்களாலும், பார்வைகளாலும்,
உணர்வைப் பரிமாறிய மனிதனின் ஆரம்ப நிலையே,
மொழி வளர்ச்சியில்,
கருத்து வெளிப்பாட்டின் உச்ச நிலையும் ஆயிற்று.
மொழி வல்லமை கூர்மை பெற்றுக் கைவர,
குறிப்பினால்,
ஒரு சில சொற்களுள்,
பல பொருட்களை உள்ளடக்கி,
பேசும் வல்லமை,
புலவர்க்குச் சாத்தியமாயிற்று.
அவ்வல்லமையால் கவிதைகள் தோன்றின.
அங்ஙனம் புலவர்களால் ஆக்கப்பட்ட கவிதைகள்,
சூத்திரங்கள் எனப்பட்டன.
அப்புலவர்களின் அறிவு நிலையை ஒத்து,
குறிப்பறியும் வல்லமை பெற்ற,
பின்வந்த வல்லார் சிலர்,
சில வரிகளால் அமைந்த அக்கவிதைகளுள் நுழைந்து,
பல பொருள் கண்டனர்.
இவ்வளர்ச்சியில்,
குறிப்பறிதலே மொழியின் உயர் நிலையாயிற்று.
அதுவே,
மானுட வளர்ச்சியின் மாண்புறு நிலையாகவும் பேசப்பட்டது.
"குறிப்பறியமாட்டாதான் நன்மரம்" என ஔவை பேச,
வள்ளுவரோ குறிப்பறிதல் எனும் ஒரே தலைப்பில்
இரு அதிகாரங்களை,
பொருட்பாலிலும், காமத்துப்பாலிலும் அமைத்து,
குறிப்பறிதலின் உயர்வுணர்த்தினார்.

❁ ❁ ❁

இங்ஙனமாய் மீண்டும் மொழி சுருங்க.
சுருங்கப் பேசுதலும், விளங்கப் பேசுதலுமே.
மொழி வன்மையாயிற்று.
இவ்விரு தகுதிகளின் உச்ச வெளிப்பாடே,
வள்ளுவர்தம் குறளாம்.
அறிவுக் கூர்மையால் சுருங்கிய மொழி,
காலவோட்டத்தில்,
தமிழர் மத்தியில் மீண்டும் விரியத் தலைப்படுகின்றது.
மொழிப்பிரயோகத்தில்,
நீளமாய் எழுதலும், பேசுதலுமே,
அறிவு வளர்ச்சியாய்க் கருதப்படும் தாழ்நிலை இன்று!
பரீட்சைகளில் கட்டுரை எழுதப் பணிக்கப்படும் மாணவர்க்கு,
கட்டுரைபற்றிய அறிவுறுத்தலும், புள்ளியிடலும்,
பொருளளவினால் அன்றி,
சொல்லளவினாலேயே வரையறை செய்யப்படுகின்றன.
பத்திரிகைகளும்,
பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கான சன்மானத்தை,
இச்சொல்லளவு கொண்டே தீர்மானிக்கின்றன.
பல்கலைக்கழக ஆய்வுகள் கூட,
பக்கங்களின் அளவு கொண்டே பரிசீலிக்கப்படுகின்றன.
ஆதலால்,
கூர்மையுற்றுச் சுருங்கிய நம் தமிழ் மொழி,
இன்று பின் நோக்கிச் சிதைவுற்று நீண்டு வருகின்றது.
இந் நிலை தவிர்க்க முன்வருவார் யார்?
அனைவரும் முயல்வோம்.

**இ.ஜெயராஜ்**
**(கம்பன் கழகம்)**

❁ ❁ ❁

## நெருப்பில் குளிக்கும் நிகழ்

**தீயெழுந்து திசையை வறுத்தது.**
**சீறும் வேட்டுகள் மூச்சைக் கொறித்தது.**
**பேயடித்த... மனிதப் பிரமைபோல்**
**பேரதிர்ச்சி எங்கும் உறைந்தது.**
**'பூவினால் நெய்த தாவணி' போட்டமண்**
**பொசுங்கிடப் பொய்கள் பூசி மெழுகிற்று.**
**ஓய்வெதும் அற்று.... முப்பது ஷெல்களை**
**ஏவும் கர்ச்சனை அமைதியைக் கொன்றது.**

**எங்கள் வாழ்வு நடந்த தெருக்களில்**
**எரிமலைகள்; வயலில் சுடலைகள்.**
**மங்களம் வாழ்ந்த மடியில்.... சனமற்ற**
**மௌன ஓலங்கள்! மரண கானங்கள்**
**சங்கம் வைத்த மண் ணெங்கும் அசிங்கங்கள்**
**சகதிக்குள் அழும் அகதிக் கனவுகள்**
**பங்கமாகும் சரித்திரம்....! நாளைக்கும்.....**
**பலிக்கடாக்களா எங்கள் கனவுகள்?**

**- அருணன்**

## எந்த முகத்தோடு வந்தார் இங்கே?

'மக்கள் அரசு; மக்களைக் காக்க
மக்களால் ஆளப் பெறுவதே ஆகும்'
தக்கவர் தம்மை மக்கள் தேர்வதே
பக்குவ ஆட்சியைப் பயன்தர நிறுத்தும்.
மக்களை விலைக்கு வாங்க நினைத்தலும்;
மக்கள் அதற்கு விலைபோ தலமெனும்
செக்கு அரசியற் செல்வாக்(கு)ஓச்சிய
மக்குத் தனத்தால் மாய்ந்தது நாடு.
திக்குத் திசையெதும் தெரியாப் போக்கில்
விக்கித் தேசம் அழியுது போரால்.
முக்கி முனகிக் கடனதில் மூழ்கி
வக்கு இலாது வளமெலாம் சிதைந்தது.
தக்க அரசியற் சாதனை இன்றி
உக்கி; மனிதர் உயிரும் உடைமையும்
மக்கி ஆகி மன்பதை நீதி
பக்க வாட்டில் பழிக்காய் ஆச்சுது.
ஒருவர் பழியை ஒருவர்க்(கு) ஆக்கி(ப்)
பெருகும் கொலைகளாற் பாதகச் செயல்களாற்
குருதி ஓடிடக்; குறட்டை விடுவோர்
அருகதை இன்றியே அரசியல் நடத்திறார்.
இந்த அழகில் இன்னும் இன்னும்
வந்து வந்து வாக்குக் கேட்பவர்
வெந்த புண்ணில் வேல்பாய்ச் சிறரே!
எந்த முகத்தொடு வந்தார் இங்கே?

*~ தீவகன்*

## கதியிழந்து போனமையா!

*(தென்மராட்சி மட்டுவிலில் இருந்து இடம்பெயர்ந்த ஒருவரின் இதயக்குமுறல்)*

**சொந்த இடம் விட்டுவந்தோம்**
**சொத்து சுகம் துறந்து வந்தோம்**
**பந்தங்களை விட்டு வந்தோம்**
**படுந்துயரம் தீர்வ தெப்போ?**

**சகதிவழி நடந்து வந்தோம்**
**சார்ந்த துயர் கொஞ்சமில்லை**
**அகதியெனப் பெயர் பெற்றோம்**
**அன்னை தமிழ்ப் பூமியிலே.**

**மழலைகளைச் சுமந்து வந்தோம்**
**மண்ணதனை விட்டு வந்தோம்**
**தளர்ந்த உடல் முதியோரை அங்கு**
**தவிக்க விட்டிங்கு வந்தோம்.**

**கோர்க்காலி நெல்லெடுத்து நாங்கள்**
**குத்தி யென்றும் உண்டுவந்தோம்**
**ஊர்விட்டு ஊர்சென்று நாம்**
**உணவுக்காய் அலைகின்றோம்**

**வீடுவாசல் மரங்கள் எல்லாம்**
**வீழ்ந்த ழிந்து போனதையா**
**காடுபோல எம்மூரும் இப்போ**
**காட்சிதான் தருகுதையா.**

**குடிசையிலே வாழ்ந்தாலும் நாம்**
**கூழ்குடித்து மகிழ்ந்திருப்போம்**
**குடிமூழ்கிப் போனதையா எம்**
**குழந்தைகளும் சோருதையா.**

**ஆவிலே பாலெடுத்து நாங்கள்**
**அகமகிழப் பருகி வந்தோம்**
**பாவியர் செய் கொடுமையினால்**
**பாலுக்காய் அலைகின்றோம்.**

**பயறுழுந்து தானியங்கள் எம்**
**பானையிலே நிறையவுண்டு**
**கயவர்செய் கொடுமையினால் நாம்**
**கஞ்சிக்காய் அலைகின்றோம்.**

**மண்வீட்டில் வாழ்ந்தாலும் எம்**
**மனதினிலே வஞ்சமில்லை**
**கண்பட்டுப் போனதையா நாம்**
**கதியிழந்து போனமையா.**

**விடிவொன்று வாராதோ எம்**
**வீடு சென்று சேரோமோ**
**மிடியுடனே பல நூறு**
**வேதனைதான் விதியாமோ.**

**பன்றித் தலைச்சித் தாயாரே**
**பாரே போற்றும் தாயாரே**
**கன்றை இழந்த பசுப்போலக்**
**கதறும் நிலைக்கு ஆளானோம்.**

**அன்று உந்தன் அருளதனால்**
**ஆவின் தலை பன்றியாச்சு**
**இன்று எங்கள் இடரகல**
**ஏது வழி கூறுமம்மா?**

**~ செ. சுதாகரன்**
**மட்டுவில் வடக்கு.**

## ஒட்டாதது!

**மலிவென விலையிலே பொருள்கள்**
**மனதினை இழுக்குமே தெருக்கள்**
**குதூகலி நிலைபெறு மக்கள்**
**கூடவே செல்லுதல் கண்டும் - என்**
**மனதிலே இன்பமே இல்லை**
**வாழ்வது இனிக்கவு மில்லை!**

**தளதள நிறத்திலே பெண்கள் - வாழைத்**
**தண்டெனக் காட்டுவர் தொடைகள்**
**பளபள ஜொலிக்கின்ற மார்பின்**
**பாதியைக் காட்சிக்கு வார்த்தும் - என்**
**மனதிலே இன்பமே இல்லை**
**வாழ்வது ருசிக்கவு மில்லை!**

**கேட்டது கிடைக்கிற கொழும்பு**
**கேளிக்கை மன்றத்துத் துரும்பு**
**பாட்டுடன் கூத்தது நிறைந்து**
**பாரிலே சொர்க்கமாய் இருந்தும் - என்**
**மனதிலே இன்பமும் இல்லை**
**வாழ்வது சுகிக்கவு மில்லை!**

**- கி.குருபரன்**
**கொழும்பு-13**

# 20 தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவல்

## கண் ஆஸ்பத்திரி குண்டு வெடிப்புக்கு அவர்களில் ஒருவரே காரணமாம்

கொழும்பு,செப்.19

எதிர்வரும் தேர்தல் பிரசாரக் களத்தை இலக்காகக் கொண்டு கொழும்பு நகருக்குள் பாரிய குண்டுத் தாக்குதல்களை நடத்தும் நோக்குடன் மேலும் 20 தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஊடுருவிய குண்டுதாரி ஒருவரே கடந்த வெள்ளியன்று கண் வைத்தியசாலைக்கு முன்பாகத் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் -

குண்டுதாரியின் இலக்கு என்ன என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை என்று அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

அரசியல்வாதி ஒருவரே இலக்காக இருந்திருக்கலாம் என்ற சந்தேகமே வலுவாக உள்ளதாக மேலும் அவர்கள் கூறினர்.

அதே சமயம் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்க வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கொழும்பு நகரில் தாக்குதல்களை மேற்கொள்ளப் பெரும் அளவில் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

கண் ஆஸ்பத்திரிக்கு முன்பாகக் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்துள்ள அவர் இந்தத்தாக்குதலை ஐ.தே.க. கண்டிக்காதது குறித்து விசனம் தெரிவித்துள்ளார். (இ-3-9-20)

## மின்னிணைப்பு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.19

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படவுள்ள ஆறு மாதகால - இலவச - மின் இணைப்புப் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள ஆர்வமுடையோர் அராலி வடக்கில் அமைந்துள்ள கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தின் போதனாசிரியர் கேட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ. (சாதாரண தரம்) வரை கல்வி பயின்றவர்கள் இந்தப்பயிற்சி நெறியைத் தொடர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-8-9)



நில அளவைத் திணைக்களத்தின் 200 வருடச் சேவைப் பூர்த்தி விழாவில் யாழ்.மாவட்ட நில அளவை அத்தியட்சகர் பொ.சிவதாஸ் உரைநிகழ்த்துகிறார். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், மூத்த நில அளவையாளர் சி.சந்திரசேகரா, யாழ்.மாவட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்கத் தலைவர் த.சபாநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# நாட்டின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு நில அளவைத் திணைக்களம் பெரும் பங்கு

## 200 வருட பூர்த்தி வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம்,செப்.19

நாட்டின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் நில அளவைத் திணைக்களம் பெரும் பங்காற்றியுள்ளது.

மேற்கண்டவாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

நில அளவைத் திணைக்களத்தின் 200 வருடச் சேவைப் பூர்த்தி விழா யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற சமயம் அதில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ். மாவட்ட நில அளவை அத்தியட்சகர் பொ.சிவதாஸ் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

பல இன்னல்களுக்கும், இடர்களுக்கும் மத்தியில் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் சேவையாற்றி வருகிறார்கள். அரசாங்கத்தின் காணிக்கொள்கைக்கேற்ப அவ்வப்போது தேவைப்படும் காணி அளவைகளை மேற்கொண்டு வரைபடங்களைத் தயாரிப்பதுடன், சுற்றுலாத்துறை, கல்வி, விவசாய அபிவிருத்தி போன்றவற்றுக்குத் தேவையான தேசப்படங்களையும் தயாரிப்பதில் அவர்கள் கடந்த 200 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே நில அளவைத் திணைக்களத்தின் இப்பணியினை நாம் கௌரவித்துப் பாராட்ட வேண்டும்.

நில அளவைத் திணைக்களத்தின் சேவை ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு மிகவும் முக்கியமான பங்களிப்பை செய்து வருகின்றது - என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு உரையாற்றியபோது, நில அளவைத் திணைக்களத்தின் அமைதியான சேவையானது 200 ஆண்டுகளாக இந்நாட்டின் அபிவிருத்தி மேம்பாட்டுக்குத் தனது முக்கியமான பங்களிப்பைச் செய்து வருகின்றது. மேலும் இவர்களின் பாதம்படாத பூமியே இல்லை எனலாம். எந்தவொரு அபிவிருத்தி வேலைக்கும் முதலில் காடுகளுக்குச் சென்று பாதைகளை அமைத்து நில அளவை வேலைகளைச் செய்வதுடன் இது தொடர்பான பூரண வரைபடங்களையும் தயாரித்து தமது மிக முக்கியமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

இவர்களின் வாழ்க்கையானது மிகவும் கஷ்டமான பணிகளுடன் தொடர்புடையது ஆகும். மேலும் இவர்களின் உதவியோடு மட்டுமே காணி சம்பந்தமான வழக்குகளுக்கு முழுமையான தீர்வு காணப்பட்டு வருகின்றது. இவர்களின் இந்த அர்ப்பணிப்பும் தியாகமும் நிறைந்த சேவையானது எமது நாட்டுக்குத் தொடர்ந்து இன்றியமையாததாகும் - என்றார். (இ)

# மக்கள் பாதுகாப்புக் குறித்து முழுநாள் வேலைப்பட்டறை

## அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இன்று நடத்தும்

யாழ்ப்பாணம்,செப்.19

மக்களின் பாதுகாப்பு என்ற தலைப்பிலான முழுநாள் வேலைப்பட்டறை ஒன்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் இன்று நடத்தப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்த வேலைப்பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணையத்தின் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த வேலைப்பட்டறையில் அரச அதிகாரிகள், சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட மக்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அண்மைக்கால இடம்பெயர்வின் அனுபவங்கள், அனர்த்தங்களுக்கு தயார்ப்படுத்தல், இடம்பெயர்ந்தவர்களுக்கு வழிகாட்டல், நெருக்கடி நிலை முகாமைத்துவம் போன்ற விடயங்கள் இந்த வேலைப்பட்டறையில் ஆராயப்படுமென்று இணைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5-9)

## 'யுனிசெவ்' உதவி

யாழ்ப்பாணம்,செப்.19

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு பிளாஸ்ரிக் பாய்கள் மற்றும் பிளாஸ்ரிக் வாளிகள் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளன.

இரு கல்வி வலயங்களிலும் 151 பாடசாலைகளுக்கு 390 பாய்களும் 288வாளிகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.(இ-5-ரி)

## கிணறுகள் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,செப்.19

பட்டினிக்கு எதிரான நிறுவனம் பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனப் பிரிவில் இரு பொதுக் கிணறுகளை புனரமைத்துக் கொடுத்துள்ளது.

இதேவேளை - பண்டத்தரிப்பு பத்தி மாதா ஆலயத்துக்கு சமீபமாகவுள்ள பொதுக்கிணறு ஒன்றையும் புனரமைப்புச் செய்வதற்கு இந்த நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் -

விரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் - விவசாய சம்மேளத்தின் தலைவரும், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத் தலைவருமான ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (இ-135)

# மாணவர்களின் கல்வி முயற்சிக்கு தொடர்ந்து ஆதரவு தருவோம்

## நன்கொடைப் பணம் வழங்கும் வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம் செப்.19

1998 இல் மக்கள் எமக்களித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எமது பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எம்மால் உதவ முடிந்தது. எதிர்காலத்திலும் தொடர்ந்து இவ்வாறு நன்கொடைகளை வழங்கி எமது மாணவர்களின் கல்வி முயற்சிக்கு ஆதரவளிக்கவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பீயின் யாழ்மாவட்ட உதவி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் கடந்த ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றவர்களுக்கான நன்கொடைப் பணம் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

பல்கலைக்கழகம், விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை, தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் அமைந்துள்ளன. எனவே இந்த பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

துன்பங்களைச் சுமந்து வரும் எமது மக்களுக்கு விடிவு வரவேண்டும். தமிழரின் கல்வி இந்த யுத்தத்தினால் அழிவடைந்துள்ளது. எமது பிரதேசத்தின் பெருமை கல்வியிலேயே தங்கியுள்ளது - என்றார்.

இந்த வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், கே.வி.குகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்குரிய நன்கொடை நிதியினை வழங்கினார்கள். (இ-5-7)

## சர்வதேச சிறுவர் தினம்

வலி.வடக்கு,செப்.19

சர்வதேச சிறுவர் தினம் எதிர்வரும் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் இது பற்றிய சுற்றறிக்கைகள் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட தினத்தில் சிறுவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுக்கும்படி சுற்றறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி பாடசாலை மாணவர்கள் இடையே "சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம்" என்ற தலைப்பின் கீழ் கட்டுரைப்போட்டிகளை நடத்தும் படியும் கேட்கப்பட்டுள்ளது. (இ-86)

# வேட்பாளர்களுக்கு இலக்கம் விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ். மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவிருக்கும் 14 அரசியல் கட்சிகளினதும் 6 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்களின் இலக்கங்களைத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எட்டுக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் ஏற்கனவே உதயனில் வெளியிடப்பட்டன. நான்கு கட்சிகளின் இலக்கங்கள் இன்று தரப்படுகின்றன.

## முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி
### சின்னம் - குதிரை

| வேட்பாளர் பெயர் | இலக்கம் |
|---|---|
| ★ அப்துல் அசீஸ் முஹம்மட் நிஸ்வி | 1 |
| ★ ஜுனைப் றமீஸ் | 2 |
| ★ நாகூர் பிச்சை முஹம்மது சலீம் | 3 |
| ★ மீரான் மொஹிடீன் முஹமட் நியாஸ் | 4 |
| ★ முஹமட் உசைன் முஹமட் சனூன் | 5 |
| ★ முஹமட் ஜமால்தீன் முஹமட் சித்தீக் | 6 |
| ★ முஹமட் யூசுப் முஹிதீன் | 7 |
| ★ முஹமட் சுல்த்தான் அப்துல் காதர் முஹமட் சுஜப் | 8 |
| ★ முஹம்மது இஸ்மாயில் சாருக் | 9 |
| ★ சாகுல் ஹமீட் நஜீப் | 10 |
| ★ சாகுல் ஹமீட் முத்தலிப் | 11 |
| ★ சுல்த்தான் முஹிதீன் முகம்மது சித்தீக் | 12 |

## ருஹுணு ஜனதா கட்சி
### சின்னம் - மோட்டார் கார்

| | |
|---|---|
| ★ கருகலகே மோஹான் டி சில்வா | 1 |
| ★ சிறிமாதுர சமிந்த மெண்டிஸ் அமரசேகர | 2 |
| ★ சுமித்திரா ஜெயக்கொடி | 3 |
| ★ தம்பு குலசேகரம் | 4 |
| ★ தம்பிராஜா கிறிஸ்கோப்பர் அரியராஜா | 5 |
| ★ பி.டி.சமிந்தா பட்டுக்கொட | 6 |
| ★ எம்.ஏ.தினேஸ் பிரியந்த | 7 |
| ★ எம்.ஏ.எல். பிரியதர்சினி | 8 |
| ★ மொக்கூட் பிலால்டோல் | 9 |
| ★ லலித் தர்மகீர்த்தி பெரேரா | 10 |
| ★ சுப்பையா சங்கர் | 11 |
| ★ அருணத சொய்சா | 12 |

## லிபரல் கட்சி
### சின்னம் - புத்தகம்

| | |
|---|---|
| ★ ஐ.எல்.எம்.நூர்டீன் | 1 |
| ★ என்.லோகேஸ்வரன் | 2 |
| ★ எம்.ஏ.அம்பலவாணர் | 3 |
| ★ எம்.நிர்மலானந்தன் | 4 |
| ★ சும.மகேஸ்வரி | 5 |
| ★ எஸ்.அழகராஜா | 6 |
| ★ எஸ்.இளையநம்பி | 7 |
| ★ எஸ்.சுப்பிரமணியம் | 8 |
| ★ ஜே.டி.என்.ஹென்றி ஆராச்சி | 9 |
| ★ பீ.மரியதாசன் | 10 |
| ★ வீ.பி.முத்தையா | 11 |
| ★ சமன் இந்திரஜித் | 12 |

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
### சின்னம் - சைக்கிள்

| | |
|---|---|
| ★ அந்தோனிப்பிள்ளை மரியநாயகம் செபஸ்ரியன் | 1 |
| ★ அப்பாத்துரை விநாயகமூர்த்தி | 2 |
| ★ அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி | 3 |
| ★ ஆழ்வார் செல்லத்துரை | 4 |
| ★ இளையன் மயில்வாகனம் | 5 |
| ★ கந்தையா அருணாசலம் | 6 |
| ★ கனகசபாபதி நமநாதன் | 7 |
| ★ நடராஜா இராஜசூரியர் | 8 |
| ★ நவரத்தினம் இராகுலன் | 9 |
| ★ இராமசாமி உருத்திரா | 10 |
| ★ விஜயரத்தினம் இரத்தினராஜா | 11 |
| ★ சிவகுரு இளங்கோ | 12 |

(இ-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

உங்களிடம் தரமான கோட், சூட் விற்பனைக்காக இருப்பின் நாங்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்வோம். தொடர்புகளுக்கு:- பஸ் நிலையம் முன்பாக, 163, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (78473)

## ஆசிரியர் தேவை

தரம் 9, 10, 11 இற்கு தமிழ், கணிதம் கற்பிக்கக்கூடியவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை 21.09.2000 இற்கு முன் அனுப்பி வைக்கவும். தொடர்பு: **A.** ராகவன் **(CASIO)**, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (78501)

## விற்பனைக்கு

பெற்றோல் பாவனையிலுள்ள **Bajai M** 80 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கலாநிதி லோ. ஜெயநாதன், 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (78517)

## தவறிவிட்டது

டச்சு றோட், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த சண்முகதாசன் அகிலன் என்பவரது விசேட அ.அட்டை (இல.091040978) நெல்லியடிச் சந்திக்கும் வதிரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (C/12977)

## தவறிவிட்டது

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த வரதராசா அரவிந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (790633598v), விசேட அடையாள அட்டை (0904000801) இரண்டும் சுழிபுரத்திற்கும் வட்டுக் கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுழிபுரம் தபாலகத்தில் ஒப்படைக்கவும். (78518)

களபூமி, காரைநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த பொன்னுத்துரை சரஸ்வதி என்பவரது விசேட அ.அட்டை 02-09-2000 அன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 67/3, ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (78522)

களபூமி, காரைநகர் என்னும் முகவரியைச் சேர்ந்த சரவணப்பெருமான் சரஸ்வதி என்பவரது தேசிய அடையாள அட்டை (585725398v) 02-09-2000 அன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 17/2, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78523)

## அடையாள அட்டைகள்

தென்மராட்சி.செப்.19

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை ஆகியவற்றுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் அ.அட்டைகள் வந்துள்ளன.

## மக்கள் நலன்புரிச் சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம்.செப்.19

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் விசேட முதலுதவிப் படையினர், வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புப் படையினர், தொண்டர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல்4.00 மணிக்கு கொக்குவிலில் அமைந்திருக்கும் மேற்படி சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் ஆலயங்களில் சேவை ஆற்றிய தொண்டர்களுக்கான சேவைச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கடமை புரிவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (க)

## மதகு வேலை பூர்த்தி

மானிப்பாய், கட்டுடை மதவடி வீதியுடன் இணைந்த குள வாய்க்கால் அணைக்கட்டு யாழ்ப்பாணம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (இ-90)

---

புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின்

## திருநாள் (24.09.2000)

யாழ். போதனா வைத்தியசாலை

புரட்டாதி 21ஆம், 22 ஆம் தினங்களில் வழிபாடுகள்
மாலை 4.25 (பு.நே) மணிக்கும்
23ஆம் திகதி குணமாக்கல் வழிபாடு
மாலை 4.25 மணிக்கும்
24ஆம் திகதி திருநாள் திருப்பலி
காலை 7.15 மணிக்கும் இடம்பெறும்.

*அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.*

(78526) ஆன்மகுரு

---

## அறிவித்தல்

சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்க அங்கத்தவர்கள் துன்னாலை மத்தி சிக்கன கடன் கூட்டுறவு சங்கக கட்டடத்தில 24-09-2000 காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கவும்.

தலைவர்
திருமத க. ஞானச்சந்திரன்

(78530)

---

12-09-2000 இல் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ள

## தேசிய சேமிப்பு வங்கியின் புதிய வட்டி வீதங்கள்

*சேமிப்பு சான்றிதழ்கள்*

| | | |
|---|---|---|
| 1 | வருடம் | 12.5 % |
| 2 | வருடம் | 13.4 % |
| 3 | வருடம் | 14.5 % |
| 4 | வருடம் | 15.3 % |

*நிலையான வைப்பு*

| | |
|---|---|
| 1 வருடம் முதிர்வில் | 12 % |
| 1 வருடம் மாதாந்தம் | 11.6 % |
| 3 மாத அழைப்பு வைப்பு | 10.5 % |

ஏழு நாள்களின் பின் நாளாந்த அடிப்படையில் வட்டி வீதம் கணிக்கப்படும்.

3 மாத குறுகிய கால வைப்பு 12.5 %

ஒரு மாதத்தின் பின் நாளாந்த அடிப்படையில் வட்டிவீதம் கணிக்கப்படும்.

NSB "உங்கள் குடும்ப வங்கி" "Your Family Bank"

(C/12978)

---

## அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை மூன்றாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் அனைத்து மூன்றாம் வருட மாணவர்களையும் தவறாது நாளை (20-09-2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நுண்கலைத்துறை மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

*மாணவ பிரதிநிதி,*
3 ஆம் வருட நுண்கலைத்துறை.

(78519)

---

## குருக்கள் தேவை

கொக்குவில் - தாவடி வேம்படி முருகமூர்த்தி கோயிலுக்கு
ஆசாரமுள்ள குருக்கள் தேவை.
வேதனம் பேசித் தீர்க்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

சு. மகேந்திரராசா, செயலாளர்
இ. சிவலிங்கம், தலைவர்

(78525)

---

## வாழ்த்துகின்றோம்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம் உருவான காலத்திலிருந்து பல்வேறு வகையில் இக்கட்டான சூழ்நிலைகளிலும் நிறுவனத்தை வளர்த்தெடுத்து இன்று அதன் முதலாவது அதிகாரம் கொண்ட இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்புக்குரிய

**திருமிகு T. இராஜரட்ணம்** அவர்களை

அவரது பணி மென்மேலும் சிறப்புற
மனதார வாழ்த்துகின்றோம்.

வருகை விரிவுரையாளர்கள்,
யாழ். தொழில்நுட்ப நிறுவனம்,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.

(78521)

---

## "உ" அட்டை வைத்திருக்கும் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் களைத்துக்கு

'உ' அட்டை வைத்திருந்து பாதிக்கப்பட்ட வணிகர்கள், தமது 'உ' அட்டையை மீண்டும் சாவகச்சேரி பிரதேச செயலர் காரியாலயத்திற்கு கொண்டு சென்று, 'அ' அட்டையாக (மாற்றிக் கொடுக்கப்படும்) மாற்றி, தற்போதைய தங்கள் வதிவிட கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து 'உலர்உணவு' பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

*கைத்தொழில்வணிகர் மன்றம்,*
*சாவகச்சேரி.*

து. இராசதுரை
செயலாளர்

(78529)

---

உ
கணபதி துணை

வல்வை நெடியகாடு

## திருச்சிற்றம்பலப் பிள்ளையார் தேவஸ்தானம்

## பாராட்டு உபசார விழா

(19-09-2000)

இடம்: **தேவஸ்தான மண்டபம்**
காலம்: **இன்று (19-09-2000) செவ்வாய் மாலை 5.00 மணி**
தலைவர்: **பேராசிரியர் பிரம்மஶ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்** *(யாழ். பல்கலைக்கழகம்)*

ஸ்தோத்திர பாராயணம: பிரம்மஶ்ரீ அ. செல்வராச சர்மா *(தேவஸ்தான குரு)*
திருமுறை ஓதல
வரவேற்புரை: பிரம்மஶ்ரீ ச.ஶ்ரீ காந்தக்குருக்கள் *(சுன்னாகம்)*
*தலைமை உரை*

தொடர்ந்து வல்வை சிவன் தேவஸ்தான பிரதம குருவும் நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக பிரதிஷ்டா குருவுமாகிய

**பிரம்மஶ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள**
அவர்களைக் கௌரவித்தல்.

*1. மேற்படி ஆலய தேவஸ்தானம் சார்பாக : தலைவர்*
*2. கும்பாபிஷேக குருமார் சார்பாக*
*3. வடமராட்சி சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் சார்பாக*

ஆசியுரை:
1. பிரம்மஶ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் *(நீர்வை)*
2. பிரம்மஶ்ரீ தானு நாத மகாதேவக் குருக்கள் *(காயத்திரி பீடம், இணுவில்.)*

வாழ்த்துரை:
நல்லைக்குருமணி 2 ஆவது குருமகா சன்னிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

பாராட்டுரை:
பிரம்மஶ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள் *(நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்)*
பிரம்மஶ்ரீ ராம். கெங்காதரக்குருக்கள்
பிரம்மஶ்ரீ ப. சிவானந்தசர்மா *(கோப்பாய் சிவம்)*
உயர்திரு. சோ. சுப்பிரமணியம் *(மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர்)*
உயர்திரு. ஆ. சிவசுவாமி *(பிரதேச செயலர், பருத்தித்துறை)*
உயர்திரு. ந. மகேந்திரன் *(உதவி திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை)*
நாதஸ்வர வித்துவான் L.S. ஜெகநாதன் *(உடுப்பிட்டி)*
நாதஸ்வர வித்துவான் N.R.K. இரத்தினகுமார் *வாகீஸ்வரன் (இணுவில்)*

பதிலுரை: விழா நாயகர்
நன்றியுரை: தேவஸ்தானத் தலைவர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(C/12968) வல்வை வாழ் சைவப் பெருமக்களும், தேவஸ்தான பரிபாலன சபையும்.

# கிளிநொச்சிப் பகுதி மக்களின் வேதனை சொல்லில் அடங்காது

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

வடமராட்சி, செப். 19

கிளிநொச்சி மக்கள் படும் வேதனையைப் பார்க்கும் போது பளையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஓரளவுக்கு வசதியாக வாழ்கிறார்கள் கிளிநொச்சிப் பகுதி மக்கள் படும் வேதனைகள் சொல்லில் அடங்காதவை.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் இ. ஐயாத்துரை பளைப் பிரதேச செயலர் பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கு விஜயம் செய்த கிளிநொச்சி அரசாங்க அதிபர் இ. ஐயாத்துரை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

பளைப் பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் பேசும்போது மேலும் கூறியதாவது:-

கிளிநொச்சிப் பகுதி மக்களுக்கு மாதம் ஒரு தடவை வழங்கும் நிவாரணப் பொருள்கள் மிகத்தாமதமாகவே வழங்கப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் ஒழுங்காக வழங்கப்படுகின்றது. ஆனால் கிளிநொச்சியில் கடும் பாதிப்புக்குள்ளானோருக்கு நஷ்டஈடு எதுவும் கிடையாது.

கிளிநொச்சி செயலகத்தில் போதிய ஆளணி இன்மையால் நிர்வாகத்தைச் சரியான முறையில் கொண்டு செல்ல முடியாதுள்ளது. அங்கு திட்டப் பணிப்பாளர் ஒருவர் இல்லை உதவித் திட்டப் பணிப்பாளர்களை வைத்தே சமாளித்து வருகிறோம் போதியளவு எழுதுவினைஞர்கள் இல்லை. நியமனம் பெற்றுவரும் அரச உத்தியோகத்தர்கள் எவரையாவது பிடித்து இடமாற்றம் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் இனிமேல் அப்படி விடமுடியாது. இப்போது பயணத்துக்கு கப்பல் சேவை நடைபெறுகிறது. அவர்களுக்கு போக்குவரத்து வசதியாக இருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கீடுகளில் சலுகைகள் தரப்படுவதில்லை. பளைப் பிரதேச செயலகம் கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் இருந்தாலும் பளை பிரதேச செயலக ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மாத்திரமே கிளிநொச்சி மாவட்ட செயலக நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. பளைப்பிரதேசசெயலகத்தின் ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் யாழ் மாவட்ட செயலகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

பளைப் பிரதேசப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 100 வீடமைப்புத்திட்டம், அன்னாசிச்செய்கை, தர்மத் தோணி நன்னீர் மீன்வளர்ப்புத்திட்டம் ஆகியன கடந்த கால நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ளன. இது தவிர வீடுகள், அரசபணிமனைகள் சேதமடைந்துள்ளன. எதிர் காலத்தில் அவற்றைக்கட்டி எழுப்புவதென்றால் போராடவேண்டியிருக்கும்.

பளைப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து தற்போது தங்கியுள்ள இடங்களிலேயே தங்களது உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்ய வேண்டும். பளையிலிருந்து இடம்பெயர்ந்து சிந்திச் சிதறி வாழும் மக்களை ஒருங்கிணைத்து தடுநிலையான தீர்வைக் காண வேண்டும் என்றார். (இ-173)

# தேர்தல் வன்செயல்கள் பெருமளவு அச்சமூட்டுகின்றன

## மக்கள் செயற்குழு அறிக்கை

கொழும்பு, செப். 19

சுதந்திரமான நீதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஒருமித்தகுரல்கொடுத்த போதிலும் கடந்த மூன்று வார காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் அச்சமூட்டத் தக்கவையாக இருக்கின்றன.

மேற்கண்டவாறு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்குழு தெரிவித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் எழுத்து மூலமான முறைப்பாடுகளை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றோம்.

அந்தவகையில் ஆகஸ்ட் 22 முதல் செப்ரெம்பர் 12 வரையிலான காலப்பகுதியில் பொதுவாக 29 தேர்தல் தொடர்பான வன்செயல்கள் இடம் பெற்றுள்ளன.

மொத்தம் ஆறுகொலைகள் பாரதூரமான காயங்களை ஏற்படுத்திய, 13 தாக்குதல் சம்பவங்கள், ஐந்து பயமுறுத்தல் சம்பவங்கள், அரசியல்கட்சி அலுவலகங்களுக்கு தீ வைத்த சம்பவங்கள், வீடுகளுக்கு தீ வைத்த சம்பவங்கள் முறைப்பாடுகள் ஆகியன எழுத்து மூலமாகக் கிடைத்துள்ளன.

மக்கள் விடுதலை முன்னணி மட்டும் தனியாக 34 முறைப்பாடைச்செய்திருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி 18முறைப்பாடுகளைச் செய்துள்ளது

செப்ரெம்பர் 14 ஆம் திகதியளவில் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ள தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 213 ஆகும்.

கடந்த தேர்தல்களின் போது தேர்தல் பிரசார காலத்தில் வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறியமையே இப்பொழுது தேர்தல் தொடர்பான வன்செயல்கள் அதிகரிப்புக்கு காரணமாக அமைகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தென்மராட்சி கல்விவலய ஆசிரியர் சம்பள நிலுவை கொடுப்பனவுகள்

தென்மராட்சி, செப். 19

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் நெல்லியடியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிடப்படும் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அந்தந்தத் திகதிகளில் தமது கொடுப்பனவைப் பெற்றுக் கோள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

### இன்று

வரணி ம.வி, உசன் இராமநாதன் ம.வி, சாவகச்சேரி சத்தியம்மன் வித்தி., சாவகச்சேரி றோ. க. த. க. பாடசாலை, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி., மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி., நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை, சரசாலை ஸ்ரீகணேசா வித்தி, சரசாலை சரஸ்வதி வித்தி., தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை, மந்துவில் றோ. க. த. க. பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., செற்பேலி அ.த.க. பாடசாலை, ஒட்டுவெளி அ.த.க. பாடசாலை, போக்கட்டி அ.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை, எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தி,

### நாளை

### புதனும் வியாழனும்

நாவற்குளி ம.வி., கைதடி விக்னேஸ்வரா வித்தி., கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., கைதடி சேதுகாவலர் வித்தி., கைதடி கலைவாணி வித்தி., எருதிடல் அ.த.க. பாடசாலை, கைதடி நாவற்குளி அ.த.க. பாடசாலை கைதடி குருசாமிவித்தி. கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி., வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., மட்டுவில் தெற்கு அ. மி. த. க பாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தி, மட்டுவில் சரஸ்வதி வித்தி., மட்டுவில் கமலாசனி வித்தி., மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, வரணி இடைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, கரம்பைஅ.த.க.பாடசாலை, குடமியன் அ. த. க. பாடசாலை, கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, வரணி வடக்கு சைவப்பிரகாசவித்தி, இயற்றாலை அ. மி. த. க. பாடசாலை. (க-137)

# விவசாயிகளுக்கு கடன்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்கத் தீர்மானித்துள்ளது.

கடன் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் கடன் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-135)

# கொள்வனவு

சண்டிலிப்பாய், செப். 19

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இப் பகுதியிலுள்ள விவசாயிகள் உற்பத்தி செய்துள்ள செத்தல் மிளகாயை கிலோ 70 ரூபா வீதம் கொள்வனவு செய்வதென்று தீர்மானித்துள்ளது. (இ-135)

# சைக்கிள் திருடியவர் பிடிபட்டார்

சங்கானை, செப். 19

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் பூட்டியா நிலையில் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருடி எடுத்துக் கொண்டு தப்பியோட முற்பட்ட நபர் ஒருவரை அப்பகுதி மக்கள் துரத்திப்பிடித்தனர்.

கடந்த 11 ஆம்திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. பிடிபட்ட நபர் மானிப்பாய் பொலீஸில் ஒப்படைக்கப் பட்டார். (ஐ-29)

## வாசகர் திருமுகம்

# பாண்விலை அதிகரிப்பு ஏன்?

15.09 2000 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் என்ற தலைப்பில் மேற்படி விடயம் பா. இரகுநாதன், புலோலி. என்பவரால் எழுதப்பட்டு இருந்தது. கடந்த பல ஆண்டுகளாக இத் தொழிலை நடத்தும் அனுபவத்தின் ரீதியில் சுருக்கமாக வாசக நேயர்களுக்கும், பா.இரகுநாதன் என்பவருக்கும் கூறி வைக்க விரும்புவது: 350 கிராம் பாண் தயாரிப்பதற்கு 250 கிறாம் மா தேவை (புளித்தமா 400 கிறாம்) 450 கிராம பாண் தயாரிப்பதற்கு 335 கிறாம் மா தேவை (புளித்த மா 510 கிறாம்) மாவை விட ஏனைய சேர்க்கைப் பொருள்கள் நொதி, சீனி, தாவர எண்ணெய், உப்பு, அத்துடன் நீரும் சேர்ந்தே புளித்த மா ஆகும்.

ஆகவே 400 கிராம் புளித்த மா (350 கிராம் பாண்) ரூபா 8 00 எனின், 510 கிராம் புளித்த மா (450 கிராம் பாண்) ரூ 10.00 நியாயம் ஆனதே. விலைவாரியாகப் பார்க்கும்போது புளித்த மா

$$\frac{800 \times 510}{400} - 10/20$$

அல்லது பாணாக

$$\frac{800 \times 450}{350} - 10/28$$

புதிய எடை, புதிய விலையில் விற்பனை செய்வதற்காக ஒரு மாதகால அவகாசம் பேக்கரி உரிமையாளர் சங்கத்தினால் கேட்கப்பட்டதன் காரணம் புதிய பாண் அச்சு செய்வதற்காகவே. பழைய அச்சில் போட்டு அரை வேக்காடுடன் கொடுப்பதற்காக அல்ல. சென்ற இரண்டு மாதங்களாக அரச அதிபர் தலைமையில், ஏனைய திணைக்கள அதிகாரிகள், நுகர்வோர் பாதுகாவலர் சங்கத்திற்கும் வெதுப்பக உரிமையாளர் சங்கத்திற்கும் இடையில் பாண் தயாரிப்பதற்கான செயற்பாட்டு முறையில் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களின் பின் இம் முடிவு எடுக்கப் பட்டது.

வ. அஞ்சலோ.

பேக்கரி உரிமையாளர்.

# அக்கறை கொள்வார் யார்?

வலிகாமம் வடக்கிலிருந்து, குறிப்பாக பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வடமராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளில் அகதிமுகாம்களிலும், உறவினர், நண்பர்கள் இல்லங்களிலும் பல கஷ்டங்கள், நெருக்கடிகள் மத்தியில் அரசு தருகின்ற நிவாரணத்தைக் கொண்டு தமது அன்றாட ஜீவனோபாய தேவைகளைக் கூட ஈடு செய்யமுடியாது காலம் கழித்து வருகின்றனர்.

இவர்களுக்கு இதுவரை மீளக்குடியமர்வு கொடுப்பனவு ரூபா. 5000 தவிர எந்தவித நஷ்டஈடுகளோ, கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை. உடுத்த உடையுடன் உடைமைகளைக் கைவிட்டு இடம்பெயர்ந்த இம் மக்களது வீடுகள் குறிப்பாக பலாலி, மயிலிட்டி மக்களது வீடுகள் — பயன்தரு மரங்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டு கட்டாந்தரையாகக் காட்சியளிப்பதை அங்கு சென்று வந்தவர்கள் நன்கு அறிவார்கள்.

தற்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு பற்பல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இருபத்தையாயிரமென்றும் இரண்டாயிரமென்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் பொருள்கள் பண்டங்கள் என வழங்கி வருகின்றன. எமது யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் வாதிகளும் இதனை அறிவார்களா? அத்துடன் வலிகாமம் வடக்கில் இவ்வாறான ஊர்கள் இருக்கின்றனவா என்ற கேள்வியை அவர்கள் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

இத் தேர்தல் காலங்களில் சமுர்த்தியென்றும், வங்கியென்றும் அரச வேலைவாய்ப்புகள் பெருந்தொகையாகவழங்கப்படுகின்றன வலிகாமம்வடக்கைச் சேர்ந்த எவ்வளவோ படித்த இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அத்துடன் சமுர்த்தி நியமனங்கள் அறம்புறமாக அள்ளி வழங்கப்படுகின்றன. ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் என்ற காரணத்தினால் குறிப்பாக வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மக்கள் புறக்கணிக்கப்படுவது மிகவும் வேதனைக்குரியது. இதனை சம்பந்தப்பட்டவர்கள் அறிவார்களா?

மேலும் தம்மை ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகள் முன்னொரு காலத்தில் வலிகாமம் வடக்கிலே கொடிகட்டிப் பறந்தவர்கள் அவர்களை வளர்த்து எடுத்து பெருமை பலாலி தொடக்கம் தெல்லிப்பளை வரையுள்ள மக்களையே பெரும்பாலும் சார்ந்து இருப்பதை வரலாறு தெரிந்தவர்கள் நன்கு அறிவர். அது மட்டுமன்றி தங்களது உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு 1989—1990 கால கட்டங்களில் எமது மண்ணில் தஞ்சமடைந்த போது இவர்களை அரவணைத்து அன்புக்கரம் நீட்டி ஆதரவுடன் அனுப்பி வைத்தவர்கள் யார்? சற்றுச் சிந்திப்பார்களா?

எனவே வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நிர்க்கதி நிலையில் வாழும் எம் மக்களது நலனில் அக்கறை கொண்டு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரதும் அபிலாஷை! எனவே நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இதனையும் பத்தோடு பதினொன்றாக கிடப்பிலே போடுவார்களா?...

பலாலியூர் குடிமகன்



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) கையேற்ற பின்பு நடைபெற்ற வேலைகள் விவரம் - 2000

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம், மக்களால் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களின் தேவைகளை அறிந்து சேவைகளைச் செய்து வருகின்றோம். எமது செயலாளர் நாயகமும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலின் மூலமும் மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கே.வி. குகேந்திரனின் (ஜெகன்) முயற்சியாலும் சேவை செய்துவரும் இவ்வேளையில், பல பிரதேச உறுப்பினர்களைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரை கொடுத்தும் தொடர்ந்து வரும் அச்சுறுத்தலின் மத்தியிலும் எமது மக்களின் பணிகளில் இருந்து விலகி ஓயப் போவதுமில்லை, ஓடப்போவதுமில்லை என்பதை மக்களாகிய உங்களுக்குத் தெரிவிப்பதுடன் எமது சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் எவை என்பதைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்,

ந.திரிலோகநாதன்,
(வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும்.)

வே.மகேந்திரன்,
(வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பியின் உதவி அமைப்பாளரும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உபதலைவரும்.)

## விசேட நிதி - 1999 (ஒரு மில்லியன்)

| | | |
|---|---|---|
| 01. | விளாவெளிச் சுடலைமடம் அமைத்தல் | 1,00,000.00 |
| 02. | ஜெனரேற்றர் கொள்வனவு - இளைஞர் முன்னேற்றக் கழகம் சித்தன்கேணி | 50,000.00 |
| 03. | அராலி உப அலுவலகக் கட்டடம் அமைத்தல் | 3,50,000.00 |
| 04. | காந்திஜி சனசமூக நிலையக் கட்டடம் அமைத்தல் | 5,00,000.00 |

## பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி - 2000 மூலம் செய்யப்பட்ட வேலைகள் விவரம்

| | | |
|---|---|---|
| 01. | பாணாவெட்டி வீதி திருத்தம் | 2,50,000.00 |
| 02. | சத்தியக்காடு மீன் சந்தைக் கட்டடம் அமைத்தல் | 1,60,000.00 |
| 03. | ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை மண்டபம் அமைத்தல் | 2,50,000.00 |
| 04. | குளோரின் இடல் (வலி-மேற்கு பிரதேச எல்லைக்குள்) | 50,000.00 |
| 05. | பள்ளம் நிரப்புதல் சங்கானை வைத்தியசாலை | 40,000.00 |
| 06. | சித்தன்கேணி சந்திக்கு அருகில் உள்ள குடிநீர்த்தாங்கி அமைத்தல் | 1,00,000.00 |
| 07. | புத்தகக் கொள்வனவு | 1,50,000.00 |

## றாண் நிதி - 2000

| | | |
|---|---|---|
| 01. | பண்ணாகம் வீதி திருத்தம், கட்டம் II | 6,25,000.00 |
| 02. | அராலி உப அலுவலகக் கட்டடம் அமைத்தல் | 5,00,000.00 |
| 03. | கள்ளி வீதி திருத்தம், வட்டுக்கோட்டை. | 4,50,000.00 |
| 04. | சித்தன்கேணி சிவன்கோயில் திருத்தம் | 2,65,000.00 |
| 05. | உடையார் வீதி திருத்தம், அராலி | 3,00,000.00 |
| 06. | சங்கானை - வடலியடைப்பு ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | 3,75,000.00 |
| 07. | சத்தியக்காடு மீன் சந்தைக் கட்டடம் அமைத்தல் | 2,35,000.00 |
| 08. | சந்தை வீதி திருத்தம், வட்டுக்கோட்டை | 2,50,000.00 |

## சபை நிதியில் செய்யப்பட்ட வேலைகள் - 2000

| | | |
|---|---|---|
| 01. | வலி.மேற்கு பிரதேச சபை பெயர்ப்பலகை அமைத்தல் | 16,200.00 |
| 02. | சந்தைக் கிணறு திருத்தம், வட்டுக்கோட்டை. | 63,000.00 |
| 03. | பிள்ளையார் கோயிலடி கிணறு திருத்தம், வட்டுக்கோட்டை. | 51,000.00 |
| 04. | பிரதேச சபை வீதிகளுக்கு மக்கி ஊரி பறித்தல் | 2,95,755.00 |
| 05. | வடக்கு அராலி நீர் விநியோகத்திட்ட வால்வு அறை அமைத்தல் | 6,000.00 |
| 06. | விளாவெளிச் சுடலை மடம் அமைத்தல், பகுதி II | 30,000.00 |

## சபைநிதி மூற்பணம்

| | | |
|---|---|---|
| 01. | அம்மன் வீதி திருத்தம், சித்தன்கேணி | 40,000.00 |
| 02. | பண்ணாகம் வீதி திருத்தம், பகுதி I | 3,81,061.68 |
| 03. | மூளாய் தேவாலய வீதி திருத்தம் | 3,45,000.00 |

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிமூலம் செய்யப்படவுள்ள வேலைகள்.

| | | |
|---|---|---|
| 01. | வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் திருத்தம், தொல்புரம் | 1,00,000.00 |
| 02. | சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோயில் திருத்தம் | 1,00,000.00 |
| 03. | வடலியடைப்பு புதுறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் திருத்தம் | 2,00,000.00 |
| 04. | திருச்சாமம் பாலர் பாடசாலை புனரமைப்பு | 1,00,000.00 |
| 05. | கீரிமலை வீதி சித்தன்கேணி பெரியதம்பிரான் கோயில் திருத்தம் | 50,000.00 |
| 06. | சித்தன்கேணி கலைவாணி வீதி ஞானவைரவர் ஆலயத் திருத்தம் | 50,000.00 |
| 07. | பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயில் திருத்தம் | 1,50,000.00 |
| 08. | மூளாய்ப் பிள்ளையார் கோயில் கலையரங்கம் திருத்தம் | 50,000.00 |

## செய்யப்படவுள்ள வீதி வேலைகள்

01. கலைவாணி வீதி திருத்தம், சித்தன்கேணி.
02. வயிரவர் கோயில் திருத்தம், சித்தன்கேணி.
03. மாவடி வயிரவர் வீதி திருத்தம், சுழிபுரம்.
04. சத்தியக்காடு வீதி திருத்தம், சுழிபுரம்.
05. பிள்ளையார் கோயில் வீதி திருத்தம், மூளாய்.
06. மாணிக்க வயிரவர் கோயில் வீதி திருத்தம், சுழிபுரம்.
07. பறாளாய் முருகமூர்த்தி வீதி திருத்தம்.
08. முருகமூர்த்தி வீதி திருத்தம், சங்கானை.
09. பழைய தபாற்கந்தோர் வீதி திருத்தம், சங்கானை.
10. வல்லை 1ஆம் வீதி திருத்தம், சங்கானை.
11. தேவாலயம் - மயானவீதி திருத்தம், சங்கானை
12. பாரதி வீதி திருத்தம், சங்கானை.
13. சேத்துப்பிடிச்சி வீதி திருத்தம், சங்கானை.
14. பிளாக் வீதி திருத்தம், சங்கானை.
15. தேவாலய வீதி முதலாம் ஒழுங்கை திருத்தம், சங்கானை.
16. ஓடக்கரை வீதி திருத்தம், சங்கானை.
17. முதலி கோயிலடி வீதி திருத்தம், வட்டுக்கோட்டை.
18. கள்ளி வீதி திருத்தம் கட்டம் 2, வட்டுக்கோட்டை.
19. சந்தை வீதி திருத்தம் கட்டம் 2, வட்டுக்கோட்டை.
20. மழவராயர் வீதி திருத்தம், வட்டுக்கோட்டை.
21. திக்கிராய் வீதி திருத்தம், வட்டுக்கோட்டை.
22. கண்ணகை அம்மை கோயில் திருத்தம், வட்டுக்கோட்டை.
23. அந்திரான் 1ஆம் ஒழுங்கை திருத்தம், வட்டுக்கோட்டை.
24. அராலி வடக்கு சேச் வீதி திருத்தம், அராலி.
25. துலனை அம்மன் கோயில் வீதி திருத்தம், அராலி.
26. ஊரத்தி வீதி திருத்தம், அராலி.
27. நொச்சிக்காட்டு வீதி திருத்தம், அராலி.
28. கும்பாவளை வீதி திருத்தம், அராலி.
29. புளியடி வீதி திருத்தம், அராலி.
30. செட்டியாமடம் 2ஆம் ஒழுங்கை திருத்தம், அராலி.
31. வீரன் கலட்டி வீதி, அராலி.
32. கம்பாலை வீதி, பொன்னாலை.

## மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள கட்டட திருத்தம்

01. சுழிபுரம் அம்பாள் சனசமூக நிலைய திருத்தம்.
02. மனிதவள சனசமூக நிலைய திருத்தம்.
03. கொட்டியாவத்தை கலைவாணி சனசமூக நிலைய திருத்தம்.
04. கல்லைவேம்படி சனசமூக நிலைய திருத்தம்.
05. சுழிபுர உப அலுவலக கட்டட திருத்தம்.
06. விழிசிட்டி சனசமூக நிலைய கட்டட திருத்தம்.
07. சங்கானை அம்பாள் சனசமூக நிலைய திருத்தம்.
08. வட்டு. கிழக்கு தாவளை சனசமூக நிலைய திருத்தம்.
09. அராலி வடக்கு சுடலை மடம் அமைத்தல்.
10. அராலி உப அலுவலகம் அமைத்தல் பகுதி III.
11. வேலன்காடு சுடலை மடம் அமைத்தல், அராலி.

(C-2986)

# வாக்காளர் அட்டை விநியோகம்

# இங்கு இந்த வாரம் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் இந்த வாரம் முதல் மேற்கொள்ளப் படவுள்ளன.

குடாநாடு முழுவதற்கும் உரிய வாக்காளர் அட்டைகள் யாழ். தேர்தல் திணைக்களத்தினால் இன்று முதல் யாழ். பிரதம தபாலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

பிரதம தபாலகத்திலிருந்து குடாநாட்டிலுள்ள ஏனைய தபாலகங்களுக்கு நாளை இந்த வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டு விநியோக வேலைகள் மேற்கொள்ளப்படும்,

இதேவேளை யாழ். மாநகர சபைப் பகுதிக்கான வாக்காளர் அட்டைகள் யாழ். பிரதம தபாலகத்தினால் விநியோகிக்கப்படவுள்ளன.

வாக்காளர் அட்டைகள் யாழ். தபாலகத்துக்கு அனுப்பப்படுவதை ஒட்டி பிரதம தபாலகத்துக்கு இன்று முதல் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

பளை, தென்மராட்சி பகுதிகளிலுள்ள தபாலகங்கள் கரவெட்டியில் இயங்குவதால் இத்தபாலகம் மூலம் மேற்படி இரு இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்படும்.

கைதடியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் கோப்பாய் தபாலகம் மூலம் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-10)

## இருவர் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ். நீதிமன்றத்தால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஜோன் பிரான்சிஸ் (குருநகர்), சின்னத்தம்பி அன்பரசன் (கல்வியங்காடு, புதிய செம்மணி வீதி) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ் மாவட்ட நீதிவான் ஆர். ரி. விக்னராஜா இருவரையும் விடுதலை செய்தார். (உ-9-5-ரி)

## இறங்குதுறை புனரமைப்பு

யாழ்ப்பாணம்' செப். 19
நாவாந்துறை இறங்குதுறை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த இறங்குதுறையின் புனரமைப்புக்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-ப)

# கல்வி டிப்ளோமா பரீட்சை சித்தி பெற்றோர் விவரம்

யாழ் பல்கலைக்கழக முழு நேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதிப் பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன.

அந்தப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரம் வருமாறு:-

### விசேட சித்தி

திருமதி ஆர். அருளானந்தன், எஸ். குணசிலன், செல்வி ஜெ கிட்ணபிள்ளை, செல்வி வி. சொக்கலிங்கம், திருமதி டி. துஷீதரன், வி. எஸ். பி. துஷீதரன், செல்வி என். செபரட்ணம்

### திறமைச் சித்தி

திருமதி வி ஆர். ஞானப்பிரகாசம், செல்வி எம். செல்வநாயகம், செல்வி எஸ் சிவபாதம்.

### சித்தி

எஸ். சந்திரமௌலீசன், வி. ஜீ. சந்திரகுமார், திருமதி எல். இளங்கோ, திருமதிஜெ. ஜெயச்சந்திரன், ரி. கணேஷமூர்த்தி, திருமதி கெ கிருபாகரன், திருமதி ஜெ. கிருபாகரன், திருமதி பி. குமரகுரு, சி. பரமேஸ்வரன், இ. எல். புவிராஜசிங்கம்.

பி. சர்வானந்தன், கெ. சண்முகதாஸன், திருமதி என். செல்வேஸ்வரன், எஸ். ஸ்ரீகுமார், ரி. சிவசண்முகநாதன், திருமதி எம். தர்மநாதன், திருமதி எம். ஜி. எல். புவிராஜசிங்கம், திருமதி ரி. தயாபரராஜா, திருமதி பி. திருஞானசம்பந்தன், திருமதி சி. தியாகராஜா, கெ. ஜோகேந்திரன், எஸ் செல்வநந்தன், திருமதி சி. தர்மரட்ணம், கெ. கதிர்காமநாதன்.

சித்தியடைந்த மாணவர்கள் இன்று காலை 10 00 மணிக்கு கல்வியியல் துறை அலுவலகத்திற்கு சமூகமளிக்குமபடி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (உ-ரி)

## கலந்துரையாடல்

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நுணாவிலில் இயங்கும் சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் நிவாரண விநியோகம் ஆகியவை பற்றி ஆராயப்படுமெனவும், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வர் எனவும் சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை தெய்வானை

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தெய்வானை நேற்று (18-09-2000) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்தியர் அருணாசலம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், யோகம்மா, கந்தசாமி, சிவபாக்கியம், பத்மநாதன், சுந்தரலிங்கம், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் லட்சுமிப்பிள்ளை. பொன்னுத்துரை, ஜெகதா, மார்க்கண்டு ஆகியோரின் மாமியாரும் குகநாதன் (பெரும்பாக உத்தியோகத்தர். உடுவில்), சிவசாந்தினி குகநாதன் (விரிவுரையாளர். விலங்கியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-09-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

பொ குகநாதன்
(பேரன்)
(பெரும்பாக உத்தியோகத்தர், உடுவில்)

இல. 18, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (78549)

## கு. ச. சாந்தலிங்கம்
### (தம்பிராஜா)
(வேலணை மேற்கு, 8)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 18/3, E A. கூறே மாவத்தை வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய கு. ச. சாந்தலிங்கம் (தம்பிராஜா) அவர்கள் 14-9-2000 அன்று இறைபதமெய்தினார்.

இவர் இரத்தினாம்பிகையின் அன்புக் கணவரும் சங்கரப்பிள்ளை–தையலம்மை தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னையா–பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தர்மகுலசீலன் (குகதாசன்- கனடா), சுகராஜன் (மாஸ்டர்), விமலதாசன் (ஜேர்மனி), தவமலர், பரமதாசன் (கனடா), குமாரதாசன் (கனடா), திருமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சாந்தினி, (கனடா) யோகராணி, நந்தினி (ஜேர்மனி), குகநாதன் (விஜயா என்டர்பிறைஸ், மகாராஜா பூட்புரடக்ற் கொழும்பு), லதாயினி (கனடா), சிவசக்தி (கனடா), சிவசக்திவேல் (அபி றேடர்ஸ் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவித்திரா, லாவண்யா, மாதுசன், அனுர்த்தன், திவாஸ்கர், ராகவி, ஜீவிகா, ஜோதிகா, விஜயானந்த், வித்தியநாத், கோகுலநாத், கவான், விதுஷா, அனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவராமலிங்கம், ஏலாம்பிகை, பரமலிங்கம், சிவக்கொழுந்து, விஸ்வலிங்கம் மற்றும் பொன்னையா, காலஞ்சென்றவர்களான பேரம்பலம், கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, இராசரத்தினம் மற்றும் மீனாட்சி, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20-9-2000) புதன் கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக பொரல்ல கனத்தை A.F றேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

மனைவி, மக்கள், மருமக்கள்.

18/3 Dr. E. A. Coorry Mawatha,
Colombo- 6.
T. P. 555926, 591139. (சி/12982)

### யாழ். மாவட்டத்தில்

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் ரூ. 89லட்சம் செலவில் பல திட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின நிதி உதவியுடன் 89லட்சம் ரூபா செலவில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

குறிக்கப்பட்ட திட்டங்களும் ஒதுக்கப்பட்ட நிதி விவரமும் வருமாறு:-

★ சண்டிலிப்பாய், உடுவில் பகுதிகளில் 30 மலசலகூடங்கள் அமைத்தல்— 2லட்சத்து 60 ஆயிரம் ரூபா.

★ கரம்பன் கிழக்கு வீடமைப்புத் திட்ட உள்ளக வீதி — 5 லட்சம் ரூபா.

★ ஈவினை பொது மண்டபம் — 5லட்சம் ரூபா.

★ அளவெட்டி மலைவேம்படிச் சந்தை மீள அமைத்தல் — 6லட்சம் ரூபா.

★ வலிகாமம், வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் பழுதடைந்த மாணவர் கதிரை, மேசைகளைத் திருத்தம் செய்தல் — 15 லட்சம் ரூபா.

★ உரும்பிராயில் உள்ள வசாவிளான் மத்திய மகா வித்தியாலய கட்டடப் புனரமைப்பு— 5லட்சத்து 50ஆயிரம் ரூபா.

★ மெலிஞ்சிமுனை றோ. க. த. பாடசாலை — 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை — 5லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் — 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை — 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ சண்டிலிப்பாய் த. க. பாடசாலை — 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ இடம்பெயர்ந்தோருக்கு வலிகாமத்தில் மலசலகூடம் அமைத்தல் — 4 லட்சம் ரூபா.

★ கரணவாய் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பு — 7 லட்சம் ரூபா.

★ வடலியடைப்பு, காக்கைதீவு பொது மண்டபங்கள் திருத்தம் — 6 லட்சம் ரூபா.

★ ஆனைக்கோட்டை றோ. க. பாடசாலைக் கட்டடம் - 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ தெல்லிப்பழை பன்னாலை விவசாயிகளுக்கான கடன் திட்டம் — 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

குடிதண்ணீர் கிணறுகள் திருத்தம், பொதுக் கிணறுகள் புனரமைப்பு போன்ற திட்டங்களும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் மேற்கொள்ளப படவுள்ளன. (உ-5-9)

## பிணை அனுமதி

யாழ்ப்பாணம், செப். 19
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றதால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொட்டடி சினிவாசன் வீதியைச் சேர்ந்த தியாகராசா குகதாசன என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார்.

யாழ். மாவட்ட நீதிவான் ஆர். ரி. விக்னராஜா சந்தேக நபரை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (உ-9-5-ரி)

# நோயாளியிடம் பணம் திருடியவர் அகப்பட்டார்

யாழ்ப்பாணம், செப். 19
நோயாளியின் படுக்கையின் கீழ் இருந்து பணம் திருடிய ஒருவர் இருநாள்களின் பின்னர் நோயாளியின் உதவியாளரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

யாழ். போதனா வைத்திய சாலை ஆண்கள் சத்திர சிகிச்சை வார்ட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நோயாளியான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்துரை ஜோதீஸ்வரானந்தன் (வயது 38) என்பவரது 950 ரூபா பணமே திருட்டு போனது.

பணம் திருட்டுப் போனதை அடுத்து அங்கு வேறொரு நோயாளியுடன் உதவிக்கு நின்ற ஒருவரின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்டு இரு நாள்களின் பின் அவரை விசாரித்த போதே தான் பணம் திருடியதை அவர் ஒப்புக் கொண்டாராம்.

அந்தப்பணத்தைச் செலவு செய்து விட்டதாகவும் அதனைத் திருப்பி ஒப்படைப்பதாகவும் அவர் தெரிவித்து தன்னிடம் இருந்த 200ரூபா பணத்தை ஒப்படைத்தார் என்று கூறப்படுகிறது. (இ)

# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த
பிரதம லிகிதர்

## திரு. கா. த. ஜெயசோதி

அவர்களின் தந்தையார்

## கார்த்திகேசு தர்மலிங்கம்

அவர்கள் 16 - 09 - 2000 அன்று காலமானதை யிட்டு மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆதமா சாநதியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம். (78535)

## கூறுவிலை கோரல் - மின் இணைப்பு
## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

வடபிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில் சாலையில் உள்ள கட்டடங்களுக்கு மின் இணைப்பு வேலைகள் செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. '03 பேஸ்' மின் இணைப்புப் பொருத்துவதில் அனுபவமுள்ள ஒப்பந்தகாரர்கள் கூறுவிலைப் படிவங்களை ரூபா 100/- செலுத்தி வ.பி.போ. சபை, சிவில் பொறியியல் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வேலைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். கூறுவிலைப் படிவங்கள் 26.09.2000 வரை விநியோகிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் 28.09.2000 மாலை 4.00 மணி வரை கூறுவிலை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வி.எஸ்.சொக்கலிங்கம்,
பொது முகாமையாளர்,
வ.பி.போ.சபை.

(C/12984)


# நாளை முதல் தபாலகங்கள் ஊடாக வாக்காளர் அட்டைகள் விநியோகம்

கொழும்பு,செப்.19

வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு நாளை முதல் விநியோகிக்கப்படும் என பிரதித்தபால் மா அதிபர் கெ.எ.எஸ். சேனாதீர கூறியுள்ளார்.

தேர்தல் செயலகம் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளைத் தபால் திணைக்களத்திடம் கையளிக்கும்பணிகளை நேற்று ஆரம்பித்துள்ளது என்றும் -

தபால் திணைக்களத்தில் முத்திரைகள் பதிக்கப்பட்டவுடன் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்றும் -

விநியோகப் பணிகளை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்க முன்னர் பூர்த்திசெய்வதற்கு தபால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது எனவும் - அவர் கூறினார். (ரி-3)

## நுண்கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை மூன்றாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நுண்கலைத்துறை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து மூன்றாம் வருட மாணவர்களையும் ஒன்றுகூடுமாறு மாணவப் பிரதிநிதி கேட்டுள்ளார். (ரி-3)

## சமுகமளிக்க கோரிக்கை

சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்க அங்கத்தவர்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை மத்தி சிக்கனக் கடன் கூட்டுறவு சங்க கட்டடத்துக்கு சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ரி-3)

### ஹெலி விபத்து நடந்த இடத்தில்

# அத்தர் குப்பி, கைக்குட்டை எரியாத நிலையில் மீட்பு!

கொழும்பு,செப்.19

அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் குழுவினரைப் பலிகொண்ட ஹெலி விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து கைக்குட்டை ஒன்றும் அத்தர் குப்பி ஒன்றும் எரியாத நிலையில மீட்கப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளான ஹெலியின் சகல பகுதிகளும் முற்றாக எரிந்துள்ள நிலையில் கைக்குட்டையும், அத்தர் குப்பியும் எரியாத நிலையில் மீட்கப்பட்டமை மீட்புப் பணியாளர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஹெலியில் பொருத்தப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டும் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (உ-7)

### அஷ்ரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவூப் ஹக்கீமுக்கு வழங்க வேண்டும் என்று அக்கட்சியின் அதி உயர் பீடம் எடுத்த முடிவு குறித்து ஜனாதிபதியுடன் நேற்றுக் காலை அக்கட்சியின் தூதுக்குழு ஒன்று பேச்சு நடத்தியது என்றும் -

இது தொடர்பான முடிவை இன்று காலை தெரிவிப்பதாக அவர் உறுதியளித்தார் என்றும் -

அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் கூறினார்.

இந்நிலையில் ஜனாதிபதி நேற்று மாலை விடுத்துள்ள அறிவிப்பு அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (உ-3-8)

### ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவு முறிவடையும் சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரப் ஹெலி விபத்தில் உயிரிழந்தார்.

இந்நிலையில் இரு தரப்புக்கும் இடையிலான உறவுகள் தொடருமா, துண்டிக்கப்படுமா என்பது இன்றைய பேச்சுக்களின் பின்பே முடிவாகும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### 47 சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை பொறுப்பேற்பார்கள் என்றும் -

அனேகமாக இன்று பிற்பகலில் நீர்வேலித் தரவைப் பகுதியூடாகச் சென்று தென்மராட்சி எல்லைப் புறத்தில் வைத்து அவற்றைப் புலிகள் வசம் அவர்கள் கையளிப்பர் என்றும் -

எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3-15-8)

### சாவகச்சேரியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரம் வரை முன்னேறிய படையினரை புலிகள் கடும் தாக்குதல் நடத்தி சங்கத்தானை வரை பின்னடைய வைத்துவிட்டதாகவும் -

இச்சமர்களில் இருநூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாகவும் -

புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-க-7-8)

### கல்முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சமயம் அது வெடித்தது என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து ஏற்கனவே விலகி படையினரிடம் சரண் அடைந்திருந்ததாகக் கூறப்படும் தமிழ் இளைஞன் ஒருவனை இந்தக் குண்டு மீட்புப் பணியில் படையினர் ஈடுபடுத்தினர் என்றும் -

குண்டு வெடித்ததில் அவரும் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-8-21)

### இன்றைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அதே நேரம் -

காங்கேசன்துறையில் இருந்து 'ஹெறந்தல' கப்பல் ஆயிரம் பயணிகளுடன் திருமலை நோக்கிப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

போதிய பயணிகள் இல்லாத காரணத்தால் இந்தக் கப்பலின் விசேட சேவை நேற்றுடன் இடை நிறுத்தப்படுவதாகக் கூறப்பட்டது. (உ-3)

### ஜேர்மனியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம்(வயது32), பொ.குலசிங்கம் (வயது 28), த.நடனேஸ்வரன்(வயது 34) ஆகியோர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (உ-7)

### ரணிலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அஷ்ரப்புக்கு இறுதி அஞ்சலி செலுத்தச்சென்ற போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி மீதும் அங்கு கூடியிருந்தோர் தாக்குதல் நடத்த முயன்றனர் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே(உ-7)

### ஹக்கீமும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தெரிவுகள் பற்றிய தகவல்களை ரவூப் ஹக்கீம் வெளியிட்டார்.

ஜனாதிபதியுடன் நேற்றுக்காலை நடத்திய சந்திப்புக் குறித்தும் ஹக்கீம் அங்கு விளக்கமளித்தார்.(உ-3)

### ஊரெழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீன்ஸ்'ம் அணிந்த நிலையில் காணப்படும் இந்தச் சடலத்துடன் 'சிதம்பரப்பிள்ளை சிவநாதன்,63/1, கோயில் வீதி, நல்லூர்' என்ற விவரங்கள் அடங்கிய விசேட அடையாள அட்டை ஒன்றும் காணப்பட்டுள்ளது.

சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-5-9-ரி)


(C/12983)

வீணையோ உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



(ஈ.பி.டி.பி.)

மக்கள் இல்லாமல் மண் எதற்கு?....
மண் இல்லாமல் மக்கள் எதற்கு?....
இரண்டும் சேர்ந்தே தேவை எமக்கு
இதனை நோக்கியே ஈ.பி.டி.பி யின் இலக்கு!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்துக்கே!



## மத்திய போக்குவரத்துச் சபையில் பட்டதாரி பயிலுநர் ஆள்சேர்ப்பு

மேற்படி நியமனத்துக்கு விரும்பும் வேலையற்ற பட்டதாரிகள் நாளை (20.09.2000) புதன்கிழமை காலை 7.30 மணிக்கு பட்டதாரி சங்கத்தில் ஒன்றுகூடவும்.

Note:- 10 பயிலுநர் தெரிவுசெய்யப்படுவர்.

செயலாளர்,
வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

(78520)



## JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA, SRI LANKA

REGD.NO. 15251

COMPUTER COURSES

| | |
|---|---|
| DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DIPLOMA IN COMPUTER PROGRAMMING |
| Course Fee:Rs.19,250 Duration: 12 Months | Course Fee:Rs.8,250 Duration: 8 Months |
| DIPLOMA IN WINDOWS APPLICATION | CHILDRENS PROGRAMMING |
| Course Fee:Rs.7,500 Duration: 6 Months | Course Fee:Rs.2,500 Duration: 3 Months |
| DIPLOMA IN MICROSOFT OFFICE(2000) | CERTIFICATE COURSES |
| Course Fee:Rs.6,000 Duration: 6 Months | Ms Excel 2000, Ms Word 2000, Ms Access 2000, Ms Powerpoint 2000, dBase III, Pascal, CorelDrow, PageMaker and Visual Basic 6 |

- கூடிய நேர செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
- கட்டணத்தினை தவணை முறையில் செலுத்தும் வசதி.
- பாடசாலை மாணவருக்கான மாலைநேர வகுப்புகள்.
- தொழில் புரிவோருக்கான சனி, ஞாயிறு வகுப்புகள்.

IN VIEW OF OUR 21st ANNIVERSARY J.T.I

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

பிரிவு III ஆரம்பம் 23.09.2000 9.00 a.m

இப் பிரிவில் சேரும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டணத்திலிருந்து 25% கழிவு வழங்கப்படும்.

NO.07, PALALY ROAD,
JAFFNA.
(இலுப்பையடிச் சந்தி அருகில்)

- DIRECTOR

(C/12972)





க.சுபத்திரன் (றொபேட்)
இல. - 03

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக் குழு - 02
ஈ.பி.ஆர்.எல்.எஃப்



X



அ. வரதராஜப்பெருமாள்
இல. - 01


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்), நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.